பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 09 வியாழக்கிழமை 25.09.2025 கதிர் 319

## இது ரகசியம் அல்ல!



சுகாதாரத் துறையின் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கைது செய்யப்பட்டபோது மருந்துகள் கொள்வனவில் இடம்பெறும் ஊழல் வெட்டவெளிச்சத்துக்கு வந்தது. ☞2

## வவுனியா மாநகர சபையாக உயர்த்தப்பட்டபோதும் வசதிகள், ஆளணிகள் இதுவரை வழங்கப்படவில்லை

### சத்தியலிங்கம் எம்.பி. சுட்டிக்காட்டு

வவுனியா நகரசபை மாநகரசபையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் மாநகரசபைக்கான அடிப்படை வசதிகள், ஆளணிகள் வழங்கப்படவில்லை. 2026 ஆம் ஆண்டிலாவது ஆளணியை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். வவுனியா மாவட்டத்திற்கு ஒரு தீயணைப்பு வாகனம், ஒரு அம்பியூலன்ஸ் மட்டுமே உள்ளன . தனியான ஒரு பிரிவு இல்லை. இந்த பிரச்சினைக்கும் உடன் தீர்வு காண வேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் எமது பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள வீதிகளை திருத்துவதற்காக நிதி ☞9

## ரணிலின் மறியலுக்கு பதவியுயர்வு அமைச்சர் கைதுக்கு இடமாற்றம்

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. சுட்டிக்காட்டு

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மாவட்ட நீதிவானுக்கு பதவி உயர்வு வழங்கியுள்ள நிலையில் ஆளும்தரப்பின் அமைச்சர் ஒருவரை கைது செய்ய உத்தரவிட்ட நீதிவானுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.இது நியாயமானதா? அண்மையில் 17 நீதிவான்களுக்கு சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. நீதிமன்ற கட்டமைப்பில் அரசியல் தலையீடு அதிகரித்துள்ளதென ஐக்கிய மக்கள் சக்தியின் ☞2

# நிறைவேற்று அதிகாரத்தினை இல்லாதொழிப்பது எப்போது?

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் நாடாளுமன்றில் கேள்வி

திசைகாட்டியின் கொள்கை அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், அரசமைப்பு திருத்தத்தைக் கொண்டுவந்து,நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறைமையை இல்லாதொழிப்பது எப்போது என்பதை ஆளும்தரப்பு சபைக்கு தெரிவிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற்கட்டளை27(2)இன்கேள்வி எழுப்பி உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தா. அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:,

இலங்கைக் குடியரசின் இறையாண்மை மக்களை அடிப்படையாகக் கொண்டேஅமைந்துகாணப்படுகின்றது. இறையாண்மையைத் துறக்க முடியாது என்று இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசின்அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. மக்களின் இறையாண்மையை உட்சபட்சமாக பக்கபலப்படுத்த, சட்டவாக்கத்துறை, நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதித்துறை ஆகியவை பரஸ்பர புரிதலுடனும் சுயாதீனமாகவும் செயல்பட வேண்டும்.

பெரும்பான்மை அதிகாரத்தைக் கொண்ட ஆளும்தரப்பின் கீழ் இந்நிறுவனகட்டமைப்புகளின்சுதந்திரம் தடைபடுவது இயல்பானது.அதனால் இந்த ஆளும்தரப்பின் கீழும் இதில் மாற்றத்தைக் கண்டுகொள்ள ☞2

### பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள்

## சிறுவரைத் தண்டிப்பதற்கு எதிரான சட்டத் திருத்தம் நேற்று ஒத்திவைப்பு

சிறுவர்களை பெற்றோரோ ஆசிரியர்களோ ,பாதுகாவலர்களோ தண்டிக்கவோ மன ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தவோ முடியாது என்ற சரத்துக்களை உள்ளடக்கிய தண்டனை சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு நேற்று விவாதத்திற்கு எடுக்கப்பட்டபோதும் அது நிறைவேற்றப்படாது பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

தண்டனை சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் நேற்று புதன் கிழமை மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜினால் தொடக்கிவைக்கப்பட்டநிலையில்இந்தசட்டமூலத்தில் உள்ள சிறுவர்கள் மாணவர்களை கண்டிப்பது, தண்டிப்பது தொடர்பான விடயங்களில் உள்ள சரத்துக்கள்தொடர்பில்எதிர்கட்சிகளினால்கேள்விகள் எழுப்பட்டதுடன் இச்சட்டமூலம் தொடர்பில் சகல தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் இந்த சட்ட மூலம் தொடர்பில் துறைசார் மேற்பார் வைக்குழுக்கூட்டத்திலும் எதிர்க்கட்சிகள் பல்வேறு விடயங்களை சுட்டிக் காட்டி கேள்விகளை எழுப்பியவிளக்கங்களை கோரியிருந்ததுடன் திருத்தங்களை செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தியிருந்தன.

இவ்வாறான நிலையிலேயே சிறுவர்களை பெற்றோரோ .ஆசிரியர்களோ , பாதுகாவலர்களோதண்டிக்கவோ மன ரீதியான ☞2

## கைது செய்யப்படுவேன் என்று அஞ்சவில்லை ஓராண்டு சிறையிலிடுவதை தடுக்கவேண்டும்

### உதய கம்மன்பில தெரிவிப்பு

கைது செய்யப்படுவேன் என்பதற்காக நான் அஞ்சவில்லை. ஆனால் என்னை கைது செய்து ஓராண்டு சிறையிலடைப்பதற்கு ஆளும்தரப்பால் எடுக்கப்படும் முயற்சி தோற்கடிக்கப்பட வேண்டும். தவறு செய்யாமல் கைது செய்யப்படுவது தடுக்கப்பட வேண்டுமென பிவிதுரு ஹெல உருமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற வளாகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

என்னை கைது செய்ய தீர்மானித்தால் கைது செய்வதற்கு முன்பாக நீதிமன்றத்துக்கும் எனக்கும் அறிவிப்பதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். வழக்கின் ஊடாக எதிர்பார்த்தது நிறைவேறியுள்ளது. கைது செய்யப்படுவேன்என்பதற்காகநான்அஞ்சவில்லை.ஆனால் என்னைக் கைதுசெய்து ஓராண்டு சிறையிலடைப்பதற்கு ஆளும்தரப்பால் எடுக்கப்படும் முயற்சி தோற்கடிக்கப்பட வேண்டும்.

தவறு செய்யாமல் கைது செய்யப்படுவது தடுக்கப்படவேண்டும். பழிவாங்கலுக்காக இவ்வாறான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றமை தவறாகும். அது நியாயமற்றது. ஆளும்தரப்பு அதன் இயலாமையை மறைப்பதற்காக எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கு முயற்சிக்கிறது. ஹிட்லர் என்ன செய்தார் என்பதை ஆராய்ந்து பார்த்தால் அரசுத் தலைவர் அநுரகுமார என்ன செய்கின்றார் என்பது புரியும்.

நாட்டை அழிப்பதற்கு பயங்கரவாதிகள் முயற்சித்தால் அவர்களை அழிப்பது ஆளும்தரப்பின் கடமையாகும். ஆனால் தற்போது அமைதியாகவுள்ள நாட்டில் அரசமைப்பின் ஊடாக அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றன. எனவேதான் அதனைத் தடுப்பதற்காக எதிர்க்கட்சிகளாக நாம் ஒன்றிணைந்துள்ளோம். போதைப்பொருள் ஒழிப்புசெயற்பாடுகள்நிச்சயம்முன்னெடுக்கப்பட வேண்டியவையாகும்.

ஆனால் தமக்கு தெரிந்தவர்கள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதை அனுமதித்தது, ஏனையோருக்கு ☞2

## கிரிப்டோ நாணயங்கள், டொலர்களை அமைச்சர்கள் வைத்திருப்பது குற்றம்

### தயாசிறி எம்.பி. நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

அமைச்சர் வசந்த சமரசிங்க கிரிப்டோநாணயத்தைவைத்திருப்பதும், சபாநாயகர்1850அமெரிக்கடொலர்கள் வைப்பிலிட்டுள்ளமையும் நாணய சுத்திகரிப்பு சட்டத்தின் பிரகாரம் குற்றமாகும். இந்த நாணய அலகை பெற்றுக்கொண்ட முறைமையை இவர்கள்சபைக்குஅறிவிக்கவேண்டும். குற்றப்புலனாய்வுத் திணைக்களம், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உரிய விசாரணைகளைமேற்கொள்ள வேண்டும்என்றுஐக்கியமக்கள் ☞2

## மன்னார் காற்றாலை திட்டத்தை நிறுத்தாவிட்டால் மக்கள் தியாம் செய்யவும் தயங்கமாட்டார்களாம்

### மன்னார் வாசிகளை பலிக்கடாவாக்கும் செல்வம் எம்.பி.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் தொடர்பில் மக்களின் கோரிக்கைகளை கருத்தில் கொள்ளாமல் அந்தத் திட்டம் தொடர்பான செயற்பாடுகளைதொடர்ந்து முன்னெடுப்பதற்குஅரசுத் தலைவர் அறிவித்துள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தத் திட்டம் நிறுத்தப்படாவிட்டால் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தியாகம் செய்யவும் தயங்கமாட்டார்கள் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) ☞2

காலைக்கதிர் Kalāikkathir

## இனி இது .....

இதனை அடுத்து மருந்துக் கொள்வனவுகள் ஓர் ஒழுங்குக்கு வரும் என்றும் தடுப்பாடுகள் நிவர்த்திக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பொருளாதார நெருக்கடி காரணமாக, மருந்துக்கொள்வனவு சீராகவில்லை. மருந்துப் பற்றாக்குறை பூதாகாரமாக எழுந்தது.

என்.பி.பி. ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிட்டும் என்று எதிர்பார்த்தால் அதுதான் இல்லை என்கிறார்கள் மருத்துவர்கள். நாடு முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில் நீரிழிவு நோயாளிகளுக்கு செலுத்தப்படும் இன்சுலின் உட்பட பல வகையான மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை இருப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

கொழும்பு தேசிய மருத்துவமனை உட்பட, நாடு முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளின் தேவையில் பாதியளவு மட்டுமே மருந்துகள் கிடைப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மீதமுள்ள இன்சுலினைப்பெற நோயாளிகளைப்பின்னர் வரச் சொல்கிறார்கள் எனவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

நீரிழிவு மருத்துவமனை மருத்துவர்கள் பரிந்துரைக்கும் பல வகையான மருந்துகளுக்குப் பற்றாக்குறை இருப்பதாகக்கூறும் மருத்துவர்கள், அந்த மருந்துகளை தனிப்பட்ட முறையில் வாங்கச் சொல்கிறார்கள்.

நாடு முழுவதும் உள்ள பல அடிப்படை மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் இன்சுலின் பற்றாக்குறை உள்ளது, மேலும் அந்த மருத்துவமனைகளில் உள்ள நீரிழிவு மருத்துவமனைகளுக்குச் செல்லும் நோயாளிகளுக்கு பல மாதங்களாக இன்சுலின் வழங்கப்படவில்லை என்று கூறும் மருத்துவர்கள், இந்தச் சூழ்நிலையில் நீரிழிவு நோயாளிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் எனவும் பணம் இருப்பவர்கள் மட்டுமே அந்த மருந்தை தனியார் மருந்தகங்களில் இருந்து பெறுகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

சில நீரிழிவு நோயாளிகளுக்கு மாதத்திற்கு நான்கு முதல் ஐந்து குப்பிகள் இன்சுலின் தேவைப்படுவதாகவும், அந்தத் தொகையை வாங்க கிட்டத்தட்ட ரூ. 10,000 வரை செலவாகும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர். இது எல்லா நோயாளிகளுக்கும் சாத்தியமானது அல்ல என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தேசிய மருத்துவமனையின் மருந்து விநியோக நிலையத் தகவல்களின்படி, மீதமுள்ள இன்சுலினைப் பெற நோயாளிகள் மீண்டும் மருத்துவமனைக்கு வரவேண்டும், மருத்துவர்களைச் சந்தித்து மருந்துச் சீட்டைப் பெறவேண்டும், மேலும் நோயாளிகள் அதற்காக இன்னும் அதிகம் அலையவும் அதிக நேரம் காத்திருக்கவும் வேண்டும். இது மட்டுமல்லாமல் இப்படி நோயளர்கள் திரும்பத் திரும்ப வரவேண்டியிருப்பதால் வைத்தியசாலைகளில் நெருக்கடி அதிகரிப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தளவிற்கு மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று கேட்டால், மருந்துகளை வாங்கப் போதிய பணம் இருக்கிறது என்று அமைச்சர் தெரிவிக்கிறார். வேறு என்னதான் பிரச்சினை என்றால், மருந்துக் கொள்வனவு நடைமுறையில் ஏற்கனவே உள்ள பிரச்சினைகள்தான் பற்றாக்குறைக்குக் காரணம் என்கிறார்கள். பதவிக்கு வந்து ஒரு வருடம் ஆகின்ற நிலையிலும் எல்லாத் தாமதங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் கடந்த ஆட்சியாளர்கள் மீதே பழி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் கடந்த ஒரு வருடமாக இவர்கள் என்னதான் செய்துகொண்டிருந்தார்கள் என்கிற கேள்வி எழுவது நியாயமானதே!

ஒரு வருட காலத்தில் இந்தப் பிரச்சினையைக்கூடத் தீர்க்க முடியாதவர்கள் இதைவிடச் சிக்கலான பெரிய பிரச்சினைகளை எப்படித் தீர்க்கப்போகிறார்கள்? உண்மையில் அதற்கான சாத்தியவலு இவர்களுக்கு இருக்கிறதா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நிறைவேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்பில்லை என்றே புலப்படுகின்றது. ஆளும்தரப்பு தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்திருந்த பிரகாரம், அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்து, நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிப்போம் என்று அவர்கள் கூறினாலும், இன்னும் அப்படிப்பட்ட ஒரு விடயத்திற்கு எந்தத் தயார் நிலையும் இல்லை என்றே தெரிகிறது.

மக்களின் இறையாண்மையைப் பாதுகாப்பதில் ஆளும்தரப்பின் நேர்மையை சோதிப்பதற்கான அளவுகோல்களாக அமைந்து காணப்படுவன, அவற்றின் செயல்திறனை அதிகரிக்க அறிமுகப்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் முற்போக்கான சீர்திருத்தங்கள் என்பனவாகும். இதன் பிரகாரம், நான் பின்வரும் கேள்விகளை எழுப்புகிறேன். இவற்றுக்கு உரிய பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன்.

'வளமான நாடு, அழகான வாழ்க்கை' என்ற கொள்கை அறிக்கையில் பக்கம் 194 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ள ஆளும்தரப்பு இன்னும் எதிர்பார்க்கிறதா? ஆமெனில், இந்நடவடிக்கைகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளனவா? அரசியலமைப்பு திருத்தச் செயல்பாட்டில் இந்த நாடாளுமன்றத்தை எப்போது மட்டில் ஈடுபடுத்திக் கொள்வீர்கள்?

நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறைமையை ஒழிப்பது குறித்து ஆளும்தரப்பின் கருத்து நிலைப்பாடு யாது?

ஆளும்தரப்பு நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிக்க நடவடிக்கை எடுத்தால், இதற்கான கால எல்லையை இந்த சபைக்கு சமர்ப்பிப்பீர்களா?

ஆளும்தரப்பு, மாகாண சபைத் தேர்தலை எப்போது மட்டில் நடத்த எதிர்பார்க்கிறது?

மாகாணசபைத்தேர்தல்களை தொடர்ந்தும் எல்லை நிர்ணய நடவடிக்கையுடன் சிக்க வைத்து தாமதப்படுத்துவது ஆளும்தரப்பின் நிலைப்பாடா ? இல்லையென்றால், பழைய (விகிதாசார) முறையின் கீழ் தேர்தலை நடத்துவது தொடர்பான ஆளும்தரப்பின் நிலைப்பாட்டை இந்தசபைக்கு தெளிவுபடுத்துமா ?

நீதித்துறைக் கட்டமைப்பின் மீது இழக்கப்பட்ட பொதுமக்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப எதிர்பார்ப்பதாக தற்போதைய ஆளும்தரப்பின் கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக வேண்டி, ஆளும்தரப்பு சார்ப்பில் வழக்கு நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வெளியே மாகாண ரீதியாக அரசின் பிரதான வழக்கறிஞர் காரியாலங்களை நிறுவுவோம் என்றும் தற்போதைய ஆளும்தரப்பின் கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை எப்போது நிறைவேற்றுவீர்கள்? இது தவிர, கூடிய மட்டத்தில் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்த வழக்கு நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட சில நீதிபதிகளினது இடமாற்றம், சேவை இடை நிறுத்தம், பதவி உயர்வு வழங்குவது போன்ற விடயங்கள் தற்சமயம் சமூகப் பேசு பொருளாக காணப்படுகின்றன. இது குறித்த ஆளும்தரப்பின் மதிப்பீடுகள் யாவை ? என கேட்கிறேன் என்றார்.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமூலம் மீதான விவாதத்தில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

மன்னாரின் காற்றாலை மின்சாரம் தொடர்பில் மன்னாரிலும் கொழும்பிலும் தொடர்ச்சியாக மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். ஆனால் அரசுத் தலைவர் தனது கடிதத்தில் காற்றாலை மின்சாரத்தை உற்பத்தி செய்யும் உபகரண செயற்பாடுகளை முன்னெடுக்க ஆணை வழங்கியுள்ளார்.

உண்மையில் மன்னார் மக்களின் போராட்டம் பொய்திருக்கின்றதா? அந்த மக்களின் வாழ்வு உரிமை மறுக்கப்பட்டுள்ளதா? மன்னார் மக்களின் வாழ்வுரிமை பொய்யாக்கப்பட்டுள்ளதா? என்பதை இந்த சபையில் கேள்வியெழுப்பிகின்றேன்.

போராட்ட இயக்கமொன்றின் பின்னணியை கொண்டுள்ள அரசுத்தலைவர் ஆளும்தரப்பின் தலைமைப் பொறுப்பை எடுத்துள்ளார். அவர் எங்கள் மக்கள் வாழ முடியாது என்று கூறும் சூழலை உருவாக்கும் காற்றாலை மின்சார திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறுவது எங்களின் மக்களின் உயிரைத் துச்சமாக மதிக்கும் செயற்பாடாகவே இருக்கும். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

மன்னார்நகர் தொடர்பான பல விடயங்களை அரசுத் தலைவர்யிடம் எடுத்துக்கூறினாலும் அதனை கருத்தில் கொள்ளாமல் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று இலகுவாக கூறியுள்ளார். எவ்வாறாயினும் எங்களின் போராட்டம் தொடரும். அது இன்னும் வலுவடையும். மக்கள் வெள்ளமாக மாறும். மக்களின் உயிரை காவு கொள்ளும் இந்த மின்சார உற்பத்திக்கு எதிராக நாங்கள் இறந்தாலும் அடுத்த சந்ததி காப்பாற்றப்பட வேண்டும் என்று அகிம்சைவழியில் போராடும் மக்கள் இந்த போராட்டம் பொய்யாக்கூடாது என்பதற்கு பல தியாகங்களை செய்ய தயாராக இருக்கின்றனர் என்பதனை இந்த சபையில் கூறிக்கொள்கின்றேன்.

இதேவேளை அரசுத் தலைவர் மக்களை நேசிக்கின்றார் என்றால் பொருளாதார மேம்பாட்டை செய்ய வேண்டுமாக இருந்தால் இவ்வாறான திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால் அரசுத் தலைவர் சிந்திக்க வேண்டும். மக்களின் விடுதலைக்காக போராடியவர் என்ற வகையில் எங்களின் மக்களின் உயிரை காப்பாற்றும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்காக காற்றாலை மின்சார உற்பத்தியை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோருகின்றோம்.

மக்களின் போராட்டத்தை, மக்களின் ஆணையை, மக்களின் அகிம்சை போராட்டத்தை திசை திருப்பும் வகையில் இது நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் மக்கள் தியாகம் செய்ய தயங்க மாட்டார்கள் என்பதை எச்சரிக்கையாக கூறுகின்றேன் என்றார்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நீதிமன்ற கட்டமைப்பு பற்றி தற்போது பேசப்படுகிறது. மக்களின் அரசமைப்பு அதிகாரங்கள் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. சட்டமியற்றல் ஊடாக மக்களின் அரசமைப்பு அதிகாரங்கள் நீதிமன்றத்துக்குவழங்கப்பட்டுள்ளது. நீதிமன்ற அதிகார செயற்படுத்தல் சமமானதாகவும், அதிகாரமிக்கதாகவும் காணப்படுகிறதா என்பதை ஆராயவேண்டும்.

ஆளும் தரப்பினர் தனது உரையில் கடந்த காலங்களில் நீதிபதிகள் வீடு கல்லெறியப்பட்டதாகவும், பிரதம நீதியரசர் முறையற்ற வகையில் பதவி விலக்கப்பட்டதாகவும் , இவ்வாறான செயற்பாடுகளை தூய்மைப்படுத்தவே தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்ததாகவும் குறிப்பிட்டார். சமூக கட்டமைப்பில் இந்த தூய்மை பேணப்படுகிறதா என்று கேட்கிறேன்.

அண்மைகால கைதுகள் மற்றும் நீதிமன்ற தீர்மானங்கள் பற்றி சமூக கட்டமைப்பில் பரவலாக பேசப்படுகிறது. சர்வதேச சட்ட சமவாயங்களுக்கமைய நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படும் சந்தேக நபருக்கு பிணை வழங்கும் கோட்பாடு பொதுவாக பின்பற்றப்படுகிறது.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கைது செய்யப்பட்டார். சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெறாமலேயே அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராகவும், சாட்சியாளர்களுக்கு எதிராகவும் செயற்பட்டால் தான் பிணை வழங்கல் மறுக்கப்படும். ரணில் விக்கிரமசிங்க பிரபல்யமானவர். அவர் விசாரணைகளுக்கு முன்னிலையாகியிருந்தார்.

நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாகவே செயற்பட்டார். பிணைமறுப்புக்கு முறையான காரணிகள் ஏதும் இல்லாத நிலையில் தான் முன்னாள் அரசுத் தலைவர் விக்கிரமசிங்க தடுப்பு காவலில் வைக்கப்பட்டார். மோசடி வழக்கு தொடர்பில் இந்த ஆளும்தரப்பின் அமைச்சர் ஒருவரை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும் பொலிஸார் அந்த அமைச்சரை கைது செய்யவில்லை.

இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் நீதிமன்ற கட்டமைப்பில் பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளை நீதிச்சேவை ஆணைக்குழு நியாயமான முறையில் முன்னெடுத்தது. நீதிபதிகளுக்கான பதவி உயர்வு சிரேஷ்டத் துவத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டது.

நேர்முகப்பரீட்சைகள் ஏதும் இடம் பெறவில்லை. கடந்த 75 ஆண்டுகளாக இவ்வாறான முறைமையே காணப்பட்டது. அரச நிர்வாக சேவை உள்ளிட்ட உயர் அரச பதவிகளுக்கான பதவி உயர்வு சிரேஷடத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்பட்டது.

அண்மையில் 17 நீதிவான்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. சேவை மூப்பு அடிப்படையில் இந்தப் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மாவட்ட நீதவானுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆளும்தரப்பின் அமைச்சர் ஒருவரை கைது செய்யுமாறு உத்தரவிட்ட நீதவானுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இது நியாயமானதா, ஆளும்தரப்பு நீதிமன்ற கட்டமைப்பில் தலையிடுகிறது. பெரும்பாலான நீதிபதிகள் தூர பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் காட்டு நீதிமன்ற செயற்பாடுகளை நாங்கள் அறிவோம். கடந்த காலத்தில் சட்டவிரோதமான முறையில் இவர்கள் செயற்பட்டார்கள். இந்த நிலைமையை ஏற்படுத்தவா முயற்சிக்கின்றீர்கள்.

அரகலயவின் போது அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு தீ வைத்தவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார்கள். அன்று அவர்களுக்கு பிணை வழங்கியவர்களிடம் தான் நீதிச்சேவை ஆணைக்குழு இன்று ஒப்படைக் கப்பட்டுள்ளது. நீதிமன்ற சுயாதீனத்தில் தலையிட வேண்டாம் என்று ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறோம்.

## சிறுவரைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கங்களை ஏற்படுத்தவோ முடியாது என்ற சரத்துக்களை உள்ளடக்கிய தண்டனை சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் நேற்று புதன்கிழமை நடைபெற்றபோதும் அது நிறைவேற்றப்படாது பிறிதொரு தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

(இது தொடர்பாக நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதங்கள் குறித்த செய்திகள் உள் பக்கத்தில்)

## கைது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்பளிக்கும் சூழல் இருக்கக் கூடாது. தொடர்ச்சியாக போதைப்பொருட்கள் கைப்பற்றப்படுவதாக கூறப்பட்டாலும், எமக்கு கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் சமூகத்தில் போதைப்பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளதாகவோ அதன் பாவனை குறைவடைந்துள்ளதாகவோ தெரியவில்லை. எனவே ஆளும்தரப்பு அது குறித்த நிலைவரத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

## கிரிப்டோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும தெரிவித்ததாவது,

1953 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க நாடாளுமன்ற தத்துவங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டத்தின் பிரகாரம் 2018.03.07 ஆம் திகதியன்று ஆக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்ககோவையின் 6 ஆம் பந்தியின் 14 -21 வரையான பகுதியில் உறுப்பினர்களின் அடிப்படை பொறுப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்களை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தனது உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளது.

இதற்கமைய வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்கவிடம் கிரிப்டோ நாணயம் 3000 இருப்பதாகவும், சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவிடம் பைனான்ஸ் கணக்கில் 1850 அமெரிக்க டொலர்கள் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இவை நாணய சுத்திகரிப்பு சட்டத்தின் பிரகாரம் குற்றமாகும்.

அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன ஆகியோர் அவாலா அல்லது உண்டியல் ஆகிய முறைகளில் ஊடாகவா இந்த நாணய

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# பருத்தித்துறை மீனவர்கள் பாதிக்கப்பட்டபோதும் அவர்களுக்கு இழப்பீடு வழங்கல் அவசியமில்லை

## கடற்;றொழில் அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கடலுக்குச் சென்ற யாழ். பருத்தித்துறை மீனவர்கள்நான்குபேர் பாதிக்கப்பட்டுள்ளபோதும் மீண்டும் பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளதால் அவர்களுக்கு இழப்பீடுகளை வழங்க வேண்டிய அவசியம் கிடையாதெனகடற்றொழில்நீரியல்வளஅமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை உறுப்பினர் உதுமாலெப்பை எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது கேள்வியின்போது, கடந்த வருடம் ஜூலை 7 பருத்தித்துறை வெற்றிலைக் கேணி கடற்பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்கள் 194 நாட்களுக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் அவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளதா என அவர் கேள்வியெழுப்பினார். அதற்குபதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2025 மார்ச் 17 யாழ் மாவட்ட கடற்றொழில் அலுவலகத்தில் படகு உரிமையாளர்கள் மற்றும் படகோட்டிகளிடம் பெறப்பட்டுள்ள வாக்குமூலங்களுக்கு இணங்க யாழ். பருத்தித்துறை அமிர்தலிங்கம் என்பவருக்குச் சொந்தமான மீன்பிடிப் படகில் நான்கு மீனவர்கள் 2024 ஜூலை மாதம் 7 பருத்தித்துறை மீன் பிடித் துறைமுகத்திலிருந்து மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றுள்ளனர்.

கடலில் பயணிக்கையில் பலத்த காற்று காரணமாக படகு நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்தபோது 29 நாட்களுக்கு பின்னர் இந்திய மீனவர்கள் படகு ஒன்றில் வந்து அவர்களை காப்பாற்றியுள்ளனர்.

9 நாட்கள் அவர்களுடன் தங்கி இருந்தனர் எனவும் அதன் பின்னர் அவர்கள் இந்திய கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு சென்னை பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அவர்கள் மூன்று மாதங்கள் மற்றும் 10 நாட்கள் அங்கு இருந்தனர் எனவும் அதன் பின்னர் திருச்சி சிறைச்சாலையில் நான்கு மாதங்கள் 13 நாட்கள் இருந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் அவர்கள் மீண்டும் சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு 13 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பின்னர் மீண்டும் வானூர்தி மூலம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மீன்பிடிப் படகில் பயணித்துள்ள நான்கு மீனவர்களையும் இந்தவருடம் பெப்ரவரி 25 இலங்கைக்கு அழைத்துவரக் கடற்தொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக கடற்தொழில் திணைக்களம் 3 இலட்சத்து 44 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிதிச் செலவினத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

அந்த மீனவர்களுக்கு இதுவரை இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை. கடற்றொழிலில் ஈடுபடும்போது ஏற்படும் இயற்கை இடர்கள் காரணமாக உயிரிழக்கும் மீனவர்களுக்கு ஆளும்தரப்பினால் இழப்பீடுகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு உயிரிழக்கும் ஒருவரது குடும்பத்தினருக்கு ஒரு மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்படும்.

காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் அவர்களின் பங்களிப்பு காணப்பட்டால் திடீர் இடர்களின்போது உயிரிழக்கும் மீனவர் ஒருவருக்கு ஒரு மில்லியன் ரூபா முதல் இரண்டு மில்லியன் ரூபா வரை வழங்குவதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

அத்துடன் பிற வெளிநாட்டுப் படகுகளுடன் மீன் பிடிப்படகு மோதும்போது ஏற்படும் இடர்களில் உயிரிழக்கும் மீனவர்களுக்கு தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டால் உரிய கப்பல் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு இழப்பீடு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்த வகையில் மேற்படி நான்கு மீனவர்களும் பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டிய அவசியம் கிடையாது.

## நாளாந்தம் 15 பேருக்கு மார்பகப் புற்றுநோய்

*கடந்த 2022 ஆம் ஆண்டு மாத்திரம் நாடளாவிய ரீதியில் 19,457 புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்களில் 28 சதவீதமானோர் மார்பகப்புற்று நோயாளர்களாவர். அந்த வகையில் நாளாந்தம் சுமார் 15 மார்பகப்புற்று நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுவதோடு துரதிஷ்டவசமாக நாளாந்தம் 3 பேர் மார்பகப் புற்றுநோயால் உயிரிழப்பதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் பணிப்பாளரான விசேட வைத்திய நிபுணர் ஸ்ரீனி அழகப்பெரும தெரிவித்துள்ளார்.*

*ஒக்டோபர் மாதம் அனுஷ்டிக்கப்பட உள்ள மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நேற்று புதன்கிழமை சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ,*

*பெரும் சுகாதார பிரச்சினையாக உள்ள மார்பகப்புற்று நோய் தொடர்பில் ஒக்டோபர் மாதம் முழுவதும் பரவலான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மார்பகப்புற்றுநோய் தொடர்பில் வீன் அச்சம் கொள்ளத் தேவையில்லை நோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்து உரிய சிகிச்சைகளை பெறுவதன் மூலம் நோயை முழுமையாக குணப்படுத்தலாம். எனினும் நாட்டில் நோய் நிலைமையின் பிந்திய நிலையிலேயே மார்பக புற்றுநோயாளிகள் அடையாளம் காணப்படுவது வருத்தத்துக்குரிய விடயமாக உள்ளது.*

*இறுதியாக கிடைக்கப்பெற்ற 2022 ஆம் ஆண்டுக்கான சுகாதார தரவுகளுக்கமைய நாடளாவிய ரீதியில் 19,457 புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 28 சதவீதமானோர் அதாவது 5477 பேர் பெண் மார்பகப்புற்று நோயாளர்கள் என தெரியவந்துள்ளது. நோயின் பிந்திய நிலையில் சிகிச்சையளிப்பது சிக்கலான விடயமாகும். இலங்கையில் வருடாந்தம் சுமார் 15,500 புற்றுநோயாளர்கள் மரணிக்கின்றனர். 2022 ஆம் ஆண்டு மாத்திரம் 15245 பேர் அவ்வாறு உயிரிழந்துள்ளதுடன் அவ்வாறு இறந்தவர்களில் 798 பேர் மார்பகப்புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.*

*நாடளாவியரீதியில்நாளாந்தம்15மார்பகப்புற்றுநோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுவதுடன், 3 பேர் மரணிப்பதாகவும் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இந்நிலையில் மார்பகப்புற்றுநோய் தொடர்பில் தெளிவூட்டுவதற்காக ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி எவலொக்சிட்டி மாலில் விசேட கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அன்றைய தினம் விசேட வைத்தியநிபுணர்களும் நோய் தொடர்பில் மேலதிக விழிப்புணர்வுகளை வழங்க உள்ளனர் என்றார்.*

## அமைச்சரை கைது செய்ய உத்தரவிட்ட கல்கிசை நீதிவானுக்கு இடமாற்றம்

### பன்னாட்டரங்கில் முறையிடுவோம் என்கிறார் தயாசிறி

அமைச்சர் வசந்த சமரசிங்கவை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிட்ட காரணத்தால் கல்கிஸை நீதிமன்ற நீதிபதி உடன் அமுலுக்குவரும்வகையில் இடமாற்றம்செய்யப்பட்டார். சுயாதீனமாக செயற்பட்ட நீதிமன்ற சேவை உத்தியோகத்தர்கள் சங்கம் அரசியல் நோக்கத்துடன் ஆளும்தரப்புடன் தொடர்புப்பட்டுள்ளது. சேவை மூப்பு மிக்க நீதிபதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. நாங்கள் இதனை சர்வதேச நீதிமன்றம், சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம், ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனல் ஆகிய நிறுவனங்களுக்கு கொண்டு செல்வோம். நீதிமன்ற சுயாதீனம் குறித்து பிரதம நீதியரசர்விசேடகவனம்செலுத்தவேண்டும்எனஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுநடைபெற்ற தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றத்தின் சுயாதீனம் மற்றும் சட்டவாட்சி கோட்பாடு தொடர்பில் ஆளும் தரப்பில் இருந்த போதும்,எதிர்கட்சியில் இருந்த போதும் குரல் கொடுத்தோம். நீதித்துறையின் சுயாதீனத்துக்காக பேரணியாக சென்றோம்.முன்னாள் அரசுத் தலைவர் சிரானி பண்டாரநாயக்க நாடாளுமன்றத்துக்கு அழைக்கப்பட்டு, முறையற்ற வகையில் விசாரிக்கப்பட்டு பதவி நீக்கப்பட்டார்.இதற்கு எதிராக அன்று நாங்கள் கடுமையாக போராடி னோம்.

பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் விடயத்தில் இழைக்கப்படும்அநீதிதொடர்பில்நீதிமன்றகட்டமைப்பில் உள்ளவர்களுக்கு முறையிடுவதற்கு எங்கும் இடமில்லை. மேன்முறையீடு செய்ய முடியாது. இந்த அரசாங்கத்திலும் இவ்வாறான நிலை இடம்பெறுவது பாரதூரமானது.தமக்கு இணக்கமான நீதிபதிகளை தமக்குரிய இடத்தில் வைத்துக் கொள்ளும் வகையில் தான் அரசாங்கங்கள் செயற்பட்டுள்ளன.

நீதிமன்ற சேவை உத்தியோகத்தர்கள் சங்கம் என்பதொன்று உள்ளது. இது சுயாதீனமானமாக செயற்பட்டது. அரசியலமைப்பின் 110(2)ஆம் பிரிவில் நீதிமன்றத்தின் சுயாதீனத்தை பாதுகாக்கும் ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டுநீதிமன்றம் ஆகியவற்றின்நீதியரசர்கள் சேவையில் இருந்து ஓய்வுப்பெற்றதன் பின்னர் அவர்களுக்கு அரச நியமனங்கள் வழங்கப்படுவது பாரதூரமானது.

இந்த ஆளும்தரப்பு முன்னாள் பிரதம நீதியரசரை இலங்கைக்கான அமெரிக்காவின் வதிவிட பிரதிநியாக நியமித்தது. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேர்தலை பிற்போடும் போது இவர் தான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சார்பாக நீதிமன்றத்தில் சட்டமா அதிபராக முன்னிலையாகியிருந்தார். தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தபோது அதற்கும் அவர் உடன்பட்டிருந்தார். இதில் முரண்பாடான தன்மை உள்ளது தெரியவில்லையா,

உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர்களான ஸ்ரீபவன், ஈவாவனசுந்தர மற்றும் மலல்கொட ஆகியோர் சேவையில் இருந்து ஓய்வுப்பெற்றதன் பின்னர் பல்வேறு அரச பதவிகளுக்கு நியமிக்கப்பட்டார்கள்.

2022 ஆம் ஆண்டு போராட்டத்துடன் நீதிமன்ற சேவை உத்தியோகத்தர்கள் சங்கம் அரசியல் செயற்பாடுகளுடன் இந்த ஆளும்தரப்புடன் தொடர்புப்பட்டுள்ளது. இந்த சங்கத்தின் தலைவர்கள் இந்த ஆளும்தரப்பால் மாகாண ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். அதேபோல் இந்த சங்கத்தின் தலைவராக பதவி வகித்த ரங்க திஸாநாயக்க இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதிபதிகளுக்கு முறையற்ற வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சர் வசந்த சமரசிங்கவை கைதுசெய்துநீதிமன்றத்துக்கு உத்தரவிடுமாறு கல்கிசை நீதிமன்றத்தின் நீதிபதி உத்தரவிட்டார். ஆனால் வசந்த சமரசிங்க கைது செய்யப்படவில்லை. மாறாக அந்த நீதிபதி கஸ்பேவ மாவட்ட நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.கொழும்பு மாவட்டத்தின் பல நீதிபதிகள் இதனைத் முறையற்ற வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

நீதிமன்ற விடுதலை தினத்தன்று தான் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கைது செய்யப்பட்டார். தெரிவு செய்யப்பட்ட வகையில் தான் கைதுகள் தற்போது இடம்பெறுகின்றன. நீதிபதிகளுக்கானபதவிஉயர்வுஅரசியல்நோக்கத்துடன் வழங்கப்படுகிறது. சிரேஸ்டத்துவத்துமிக்க நீதிபதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. நாங்கள் இதனை சர்வதேசநீதிமன்றம், சர்வதேசசட்டத்தரணிகள் சங்கம், ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனல் ஆகிய இலங்கைக்கு அப்பாற்பட்ட நிறுவனங்களுக்கு கொண்டு செல்வோம். நீதிமன்ற சுயாதீனம் குறித்து பிரதம நீதியரசர் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பலஸ்தீன அங்கீகாரம் – அமைதிக்கான புதிய வாய்ப்பு

பல தசாப்தங்களாக இரத்தப்பாய்ச்சல், போராட்டம், அழிவு, துயரம் ஆகியவற்றைச் சந்தித்துப் போராடி வரும் பலஸ்தீன மக்களுக்கு, உலகம் இப்போது புதிய நம்பிக்கையின் கதவைத் திறந்து வைத்திருக்கிறது. உலகின் பல முக்கிய நாடுகள், குறிப்பாக மேற்கு நாடுகள், பலஸ்தீனத்தை ஒரு தனி நாடாக அங்கீகரிக்கும் செயல்முறையை ஆரம்பித்திருப்பது, வரலாற்றுப் புகழ்பெற்ற தருணமாகக் கருதப்பட வேண்டும்.

பிரான்ஸ், கனடா, இங்கிலாந்து, பெல்ஜியம் உள்ளிட்ட எட்டு நாடுகள் சமீபத்தில் பலஸ்தீனை அதிகாரபூர்வமாக அங்கீகரித்திருப்பதாக நியூயார்க் நகரில் (22) அறிவித்தன. இதனுடன், ஆஸ்திரேலியாவும் பலஸ்தீனை அங்கீகரிக்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது. இம்முடிவு, காசா பகுதியில் தொடர்ந்து நடந்து வரும் போர் மற்றும் அங்குள்ள மக்களின் பேரழிவை முன்னிட்டு, சர்வதேச அளவில் பெரும் அரசியல் அழுத்தத்தையும், அமைதி நோக்கிலான முக்கிய முன்னேற்றத்தையும் உருவாக்கியுள்ளது.

### அங்கீகாரத்தின் முக்கியத்துவம்

பலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிப்பது, வெறும் சட்டரீதியான செயல் மட்டும் அல்ல. இது, பலஸ்தீன மக்களின் தன்னாட்சிக்கான உரிமையை ஏற்றுக்கொள்ளும் சின்னமாகவும், உலகளாவிய அரசியல் சமநிலையை மாற்றும் விளக்கக்கோபுரமாகவும் திகழ்கிறது. இங்கிலாந்து போன்ற நாடுகள், இஸ்ரேல் நாட்டின் உருவாக்கத்திலேயே நேரடியாக பங்கு வகித்த நிலையில், இம்முடிவு வெளிநாட்டு கொள்கையில் மிகப்பெரிய திருப்புமுனையாக பார்க்கப்படுகிறது.

இம்முடிவு, “இரு நாடுகள் தீர்வு” (Two-State Solution) என்ற நீண்டகால கோட்பாட்டிற்கு சர்வதேச அங்கீகாரமாகவும், இஸ்ரேல்—பலஸ்தீன மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கான புதிய பாதையாகவும் அமைந்துள்ளது.

### இஸ்ரேல் மற்றும் உலகின் பதில்

இஸ்ரேல், பலஸ்தீன அங்கீகாரத்தை கடுமையாக எதிர்த்து வருகிறது. இம்முடிவு “தீவிரவாதத்திற்கு வெகுமதி அளிப்பதாக” சில நாடுகள் விமர்சிக்கின்றன. ஆனால், பலஸ்தீனத்தை அங்கீகரித்த பல நாடுகளும், ஹமாஸ் நடத்திய தாக்குதல்களில் தமது குடிமக்களை இழந்துள்ளதே உண்மை. இருந்தாலும், இந்நாடுகள் வெளிப்படையாக அறிவித்துள்ளன—பலஸ்தீன அங்கீகாரம் என்பது ஹமாஸுக்கு ஆதரவாக அல்ல, மாறாக பலஸ்தீன அதிகார சபைக்கு (Palestinian Authority) ஆதரவாக என்பதே. இது, இஸ்ரேல் நாட்டின் இருப்பை அங்கீகரித்துள்ள பலஸ்தீன அதிகார சபைக்கு ஒரு வலுவான பன்னாட்டு ஆதரவு என்று சொல்லலாம்.

### அமைதி முயற்சிகள்

பிரான்ஸ், சவுதிஅரேபியா, எகிப்து போன்ற நாடுகளுடன் நெருக்கமாக இணைந்து, பிராந்திய அமைதிக்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் (EU) மற்றும் ஐக்கிய நாடுகள் (UN) மூலம் மீதான கண்காணிப்பை உறுதி செய்து, பலஸ்தீனம் மீண்டும் தீவிரவாதக் குழுக்களின் கையிலே போய்விடாமல் தடுப்பதே இவர்களின் நோக்கம். அதே சமயம், பலஸ்தீன அதிகாரிகள், கல்வி மற்றும் பொது நிர்வாக முறைகளில் சீர்திருத்தம் செய்து, வெறுப்பு மற்றும் வன்முறையின் கொள்கைகளை அகற்றுவதாக அறிவித்துள்ளனர். இவை, அமைதிக்கான நல்ல சுட்டுமிரல்கள் ஆகும்.

### மனிதாபிமான தேவை

பலஸ்தீன அங்கீகாரம் என்பது அரசியல் மட்டுமல்ல. அது, காசாவில் அன்றாடம் உயிரிழக்கும் குழந்தைகள், பெண்கள், மூதாட்டிகள் ஆகியோருக்கான மனிதாபிமானத் தேவை என்பதையும் வலியுறுத்துகிறது. உடனடியாக தீவிரமற்ற போர்நிறுத்தம் (Unconditional Ceasefire) அறிவிக்கப்பட வேண்டும். பிடிக்கப்பட்ட பிணிகள் விடுவிக்கப்பட வேண்டும். மிக முக்கியமாக, உணவு, மருந்து, அடிப்படை உதவிகள் அனைத்தும் காசாவில் உள்ள மக்களிடம் தடை இல்லாமல் சென்றடைய வேண்டும்.

### புதிய வாய்ப்பின் வாசல்

பலஸ்தீனத்தை அங்கீகரித்த மேற்கு நாடுகளின் முடிவு, இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகியோருக்கும் வலுவான செய்தியாகும். உலகம் இனி அமைதிக்கான அழைப்பை புறக்கணிக்காது என்பதை இது காட்டுகிறது. இரத்தப்பாய்ச்சலையும் அழிவையும் நிறுத்தி, பேச்சுவார்த்தை மற்றும் அரசியல் தீர்வை நோக்கிச் செல்லும் புதிய வாய்ப்பின் வாசல் இப்போது திறக்கப்பட்டுள்ளது.

ஆகவே, பலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் உலகளாவிய மாற்றத்தை வரவேற்கிறோம். இது, காசா மக்களுக்கு மட்டுமல்ல, மத்திய கிழக்குப் பிராந்தியத்திற்கே ஒரு நிலையான அமைதியை ஏற்படுத்தக்கூடிய தொடக்கமாக அமையட்டும்.

## கொட்டாஞ்சேனை மாணவி தற்கொலை குறித்து சட்டமா அதிபரிடம் கேட்கப்படுகிறது ஆலோசனை

### பிரதி அமைச்சர் நாடாளுமன்றில் விளக்கம்

கொட்டாஞ்சேனை பாடசாலை மாணவி தற்கொலை தொடர்பான விசாரணையில் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராகவோ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இயலுமை உள்ளதா என்பது தொடர்பில் சட்ட ஆலோசனை கோரி சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தின் போது ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்கட்சியின் உறுப்பினர் ஒருவர் தனது உரையில் தேசிய மக்கள் சக்தியின் மேலதிக வகுப்பு ஆசிரியர் என்று குறிப்பிட்டார். வெளிப்படையாக பேச வேண்டும். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றத்துக்கு ‘ பி‘ அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் புதுக்கடை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை பெற்றுக்கொண்டுள்ளேன். அந்த அறிக்கையில் இறுதி பந்தியை வாசிக்கிறேன்.

‘1995ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவையின் திருத்தச்சட்டத்தின் 308ஆம் உறுப்புரை மற்றும் சாட்சி தண்டனைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் சிவானந்தராஜா என்பவருக்கோ அல்லது ஏனைய பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினருக்கோ எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இயலுமை உள்ளதா என்பது தொடர்பில் சட்ட ஆலோசனை கோரி சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது‘ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இங்கு இவர்கள் தேசிய மக்கள் சக்தியின் மேலதிக வகுப்பு ஆசிரியர் என்று குறிப்பிடுகிறார்கள். இது தவறானதொரு எடுத்துக்காட்டு என்றார்.

## கடந்த ஆட்சிக் காலத் திட்டங்கள் பல பில். நட்டத்தோடு தொடக்கம்

### ஜேவிபியால் ஏற்பட்ட நட்டம் என தயாசிறி எம்.பி. குத்திக்காட்டு

கடந்த ஆட்சிக் காலங்களில் தொடங்கப்பட்ட பெரும்பாலான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஜே.வி.பியினரின் ஆர்ப்பாட்டங்களால் இடை நிறுத்தப்பட்டன. ஆனால் அவை தற்போது பல பில்லியன் நட்டத்துடன் இவர்களால் மீண்டும் தொடக்கி வைக்கப்படுகின்றன. இவற்றிலிருந்து இவர்கள் நாட்டுக்கு எந்தளவுக்கு நட்டத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர் என்பது தெளிவாகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் செவ்வாய்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 76 ஆண்டுகளும் ஆட்சி செய்வர்கள் கள்வர்கள் என விமர்சிக்கும் தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்களின் சொத்து விபரங்களைப் பார்த்து மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். அமைச்சர்கள் செல்வந்தர்களாகியுள்ள போதிலும், முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியை ஒப்படைத்துச் சென்ற போது காணப்பட்ட டொலரை விட மேலதிகமாக ஒரு பில்லியன் டொலர் கூட இந்த ஆளும்தரப்பால் அதிகரிக்கப்படவில்லை.

ஆண்டு நிறைவடைவதற்கு இன்னும் 3 மாதங்களே உள்ள நிலையில், அதற்குள் எவ்வாறு 3 பில்லியன் டொலர் அந்நிய செலாவணியை ஈட்ட முடியும்? 2028ஆம் ஆண்டாகும் போது அந்நிய செலாவணி இருப்பு சுமார் 18 வரை அதிகரிக்கப்படாவிட்டால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும். ஆட்சி மாற்றமேற்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், ஆளும்தரப்பு இதுவரை பெற்றுள்ள டொலர் வருமானத்தை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

அமைச்சர் சுனில் ஹந்துனெத்தியிடம் சொத்து விபரங்கள் குறித்து கேட்கப்பட்ட போது அவர் அதற்கு முறையாக பதிலளிக்கவில்லை. இதுவே இன்று இந்த ஆளும்தரப்பால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலைமையாகும். இந்தியாவுடன் கையெழுத்திடப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் இதுவரையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. 323 கொள்கலன்கள் குறித்த தகவல்களும் வெளியிடப்படவில்லை. முன்னாள் அமைச்சர்கள் உபயோகித்த வாகனங்களை விற்று டொலர் வருமானத்தை ஈட்டுவதாகக் கூறியவர்கள் இன்று அவற்றை தாமே உபயோகித்துக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த ஆட்சி காலங்களில் தொடங்கப்பட்ட பெரும்பாலான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஜே.வி.பி.யினரின் ஆர்ப்பாட்டங்களால் இடை நிறுத்தப்பட்டன. ஆனால் அவை தற்போது பல பில்லியன் நட்டத்துடன் இவர்களால் மீண்டும் தொடக்கி வைக்கப்படுகின்றன. இவற்றிலிருந்து இவர்கள் நாட்டுக்கு எந்தளவுக்கு நட்டத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர் என்பது தெளிவாகிறது.

உள்நாட்டு நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்கினால் செலவுகளை பெரும்ளவில் குறைப்பதற்குரிய வாய்ப்புக்கள் காணப்பட்ட போதிலும், பல பில்லியன் கூடிய செலவுடன் சீன நிறுவனத்துக்கு வீதி அபிவிருத்தி ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து ஆளும்தரப்பின் உண்மையான முகத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் பங்கேற்பு

ஜெனிவாவில் நாளைய தினம் நடைபெறவுள்ள வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான குழுவின் 29 ஆவது கூட்டத்தில் வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் ஒக்டோபர் 8 ஆம் திகதி தொடங்கி, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தொடருக்கு சமாந்தரமாக வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான குழுவின் 29 ஆவது கூட்டம் கடந்த திங்கட்கிழமை (22) தொடங்கி, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின்கீழ் இயங்கிவரும் கிளைக்கட்டமைப்புக்களில் ஒ;றான வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான குழு என்பது சகல நபர்களையும் வலிந்து காணாமலாக்கப்படல்களிலிருந்து பாதுகாத்தல் தொடர்பான பிரகடனத்தை ஏற்றுக் கையெழுத்திட்டுள்ள உறுப்புநாடுகளால் அப்பிரகடனம் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்கான சுயாதீன நிபுணர்களை உள்ளடக்கியதொரு கட்டமைப்பாகும். இக்குழுவில் உறுப்புநாடுகளால் முன்மொழியப்படும் 10 உறுப்பினர்கள் உள்ளடங்குவர்.

இக்குழுவின் 29 ஆவது கூட்டத்தை முன்னிட்டு இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல் விவகாரம் கையாளப்படும் முறைமை, அதனுடன் தொடர்புடைய கட்டமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், பாதிக்கப்பட்ட தரப்பினரின் நிலைப்பாடு என்பன தொடர்பில் தெளிவுபடுத்தி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் என்பனவும், சிவில் சமூகத்தின் சார்பில் கொள்கை ஆய்வுக்கான அடையாளம் நிலையம், சர்வதேச மன்னிப்புச்சபை, தமிழ் உலகம் அமைப்பு, கிழக்கு சமூக அபிவிருத்தி அமையம், இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம், பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு உள்ளிட்ட அமைப்புக்களும் தமது அறிக்கைகளை ஏற்கனவே இக்குழுவுக்கு அனுப்பிவைத்துள்ளன.

இக்குழுவில் நாளையும் (26), நாளை மறுதினமும் (27) இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்படவுள்ள நிலையில், இக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையிலான உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று புதன்கிழமை (24) ஜெனிவா பயணமாகினர்.

அதேவேளை வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் ஆ.லீலாதேவியும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜெனிவா சென்றடைந்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# சிறுவர்கள் தொடர்பான முழுப் பொறுப்பும் அந்தப் பிரதேச நீதிவானுக்கே உரித்தாகும்

## அமைச்சர் சாவித்திரி தெரிவிப்பு

யாருடைய பொறுப்பில் இருந்தாலும் சிறுவர்கள் துன்புறுத்தல்களுக்கோ, உடல் ரீதியிலான தண்டனைகளுக்கோ உள்ளாக முடியாது. ஏதேனும் வழியில் அவர்களை துன்புறுத்தினால் அது குற்றமாகும். அதேநேரம் சிறுவர்கள்தொடர்பானமுழுமையானபொறுப்பும் அந்த சிறுவர்கள் வசிக்கும் பிரதேசத்தின் மாவட்ட நீதிவானுக்கே உரித்தாகும் அதனை எவருக்கும் மீற முடியாது என மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சாவித்திரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தண்டனைச்சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம் மீதான விவாதத்தை தொடக்கி வைத்து உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் தெ டர்ந்து தெரிவித்ததாவது:

சிறுவர்கள்தொடர்பானசகலவழிகளிலுமான துன்புறுத்தல்களை ஒழிப்பதற்காக நாங்கள் நடவடிக்கை எடுக்கும் போது உடல் ரீதியிலான தண்டனைகளை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கையாகவே இந்த திருத்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாங்கள் உலகளாவிய ரீதியில் பல்வேறு சட்ட கொள்கைகளுடன் இணங்கியுள்ளோம். 1990ஆம் ஆண்டில் சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தில் கையெழுத்திட்டுஅதன்உறுப்புநாடாகஇலங்கை மாறியுள்ளது. இதன்படி 1992ஆம் ஆண்டில் இலங்கை ஆளும்தரப்பு சிறுவர் உரிமைகள் பிரகடனமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கமைய சிறுவர்கள் எவ்வாறான இடங்களில் வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்களுக்கு இலக்காகின்றனர் என்று ஆராயும் போது சிறுவர்கள் அதற்குள் இலக்காகும் சம்பவங்கள் தொடர்பில் 2020ஆம் ஆண்டில் 2137 முறைப்பாடுகளும், 2021ஆம் ஆண்டில் 2471 முறைப்பாடுகளும் 2022ஆம் ஆண்டில் 2096 முறைப்பாடுகளும், 2023இல் 2238 முறைப்பாடுகளும், 2024ஆம் ஆண்டில் 1350 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதுடன், 2025ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 1126 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இது தொடர்பில் கதைக்கும்போது சிறுவர்கள் வீடுகளிலும், பாடசாலைகளிலும், நன்னடத்தை நிலையங்களிலும், சிறுவர் இல்லங்களிலும், தடுப்புக் காவல்களின் போதும் துன்புறுத்தல்களுக்கு இலக்காவதாக தெரியவந்துள்ளது.

தாய்மார்கள் வெளிநாடுகளுக்கு செல்லும் போது பிள்ளைகள் தந்தை அல்லது உறவினர்களுடனேயே இருப்பர். ஆரம்பத்தில் அவர்களின் பாதுகாப்பில் இருந்தாலும் பின்னரான காலத்தில் துன்புறுத்தல்களுக்கு இலக்காகும் சம்பவங்கள் அதிகமாகும்.

அத்துடன் பாடசாலைகளிலும் சிறுவர்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதாகவும் அறிகின்றோம். இந்நிலையில் நாங்கள் சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தில் கையெழுத்திட்ட நாடாக இருக்கின்றோம். இதன்படி இன்று நாங்கள் கொண்டு வந்துள்ள திருத்தத்திற்கு அமைய ஏதேனும் பிள்ளை குறிப்பிட்ட பாதுகாப்பில் இருக்கும்போது துன்புறுத்தல்களுக்கு இலக்கானால் அது குற்றமாகும் என்ற வகையில் அறிவிக்க முடியும். சகல பிள்ளைகளையும் இதுபோன்ற துன்புறுத்தல்களில் இருந்து விடுவிக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

அதேபோன்று 2024 நவம்பர் மாதத்தில் போகோல்ட்டாவில் நடைபெற்றசிறுவர்களுக்குஎதிரானஉடல்ரீதியிலானதண்டனைகளை இல்லாமல்செய்யும்உலகளாவியஅமைச்சர்கள்மாநாட்டில்இலங்கை கைச்சாத்திட்ட பிரதான விடயமான சிறுவர்களுக்கு எதிரான சகல உடல் ரீதியிலான தண்டனைகளை முடிவுக்கு கொண்டுவரும் சட்ட ரீதியிலான மற்றும் அரசமைப்பு ரீதியிலான நடவடிக்கைகளை எடுப்பதற்கான பூரண இணக்கத்தை வெளிப்படுத்திய நாடென்ற வகையில் சிறுவர்களை சீர்திருத்தும் நோக்கத்திலேனும் உடல் ரீதியிலான, உளரீதியிலான, வசன ரீதியிலான, பாலியல் ரீதியில் துன்புறுத்தும் குற்றங்களை செய்ய முடியாது என்பது இந்த சட்டத் திருத்தத்தில் உள்ளடங்கும்.

இதன்மூலம் சிறுவரின் முழுமையான உரிமை அந்த சிறுவர் வசிக்கும் பிரதேசத்தின் மாவட்ட நீதவானுக்கே உரித்தாகும். பெற்றோராகஎங்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ, உறவினர்களுக்கோ எவருக்கும் பிள்ளையொன்றை துன்புறுத்தலுக்கு உள்ளாக்க முடியாது. இதன்மூலம் சிறுவர்களுக்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கவே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கை பாடசாலைகளுக்குள் கல்வித்துறையில் உடல் ரீதியிலான தண்டனையை இல்லாமல் செய்வதற்காக 2016 ஏப்ரல் 29ஆம் திகதி வெளியிடப்பட்ட 2016/12ஆம் இலக்க அமைச்சரவை சுற்றுநிருபத்தின் ஊடாகவே பாடசாலைகளுக்குள் உடல் ரீதியிலான தண்டனை குற்றமாக மாற்றப்பட்டுள்ளது. பாடசாலையில் ஒழுக்கத்தை உறுதிப்படுத்தல் சுற்றுநிருபத்தின் ஊடாக சகல பிள்ளைகளுக்கும் முன்மாதிரியாக மூத்தவர்கள் இருக்க வேண்டும்.

சிறுவர் இல்லங்கள், நன்னடத்தை இல்லம், தமது பாதுகாப்பில் இருக்கும் போது சகல சந்தர்ப்பங்களிலும் தமது பொறுப்பில் இருக்கும் பிள்ளை நட்டின் பிரஜையே, அந்த பிள்ளையானது தாய், தந்தை என்ற இருவருக்கும் மட்டுமல்ல. பிள்ளையின் முழு உரிமையும் அரசாங்கத்திற்கு உரியது. பிள்ளைக்கு பொறுப்பாளர் பிள்ளை வசிக்கும் பிரதேசத்தின் மாவட்ட நீதவானாகும். இதன்படி எவருக்கும் பிள்ளையை துன்புறுத்தலுக்கு உள்ளாக்க முடியாது.

இந்த சட்டத் திருத்தத்தின் ஊடாக பிள்ளைகள் ஏதேனும் வழியில் தண்டனைகள் மற்றும் துன்புறுத்தல்களில் இருந்து பாதுகாக்கப்படும் என்று கருதுகின்றோம். வீடுகளிலோ வேறு எந்த இடத்திலோ திடீர் கோபங்களை பிள்ளைகள் மீது காட்ட முடியாது. பெற்றோராக இருந்தாலும் எந்தளவுக்கு மன அழுத்தம், கோபத்தில் இருந்தாலும் அதனை சிறுவர்கள் மீது பயன்படுத்தினால் இந்த சட்டத்தின் பிரகாரம் அது பாரதூரமான குற்றமாகும்.

1998ஆம் ஆண்டுக்கு முன்னர் 12 வயது வரையிலானவர்களையே சிறுவர்களாக பார்த்தனர். ஆனால் இப்போது அந்த வயது எல்லை 18 வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி 18 வயதுக்கு கீழான எவரும் சிறுவர்களே. அவர்கள் மீது எந்த வகையிலும் வன்முறைகள், துன்புறுத்தல்களை செய்ய முடியாது என்றார்.

# மாணவர்களை கடுமையான வார்த்தைகளால் பேசுவது மன உளைச்சலை ஏற்படுத்துகின்றது

## சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

மாணவர்களை பிரம்பால் அடிப்பதைக் காட்டிலும் கடுமையான வார்த்தைகளால் பேசுவது கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தும். ஒருசில பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்களை 'முட்டாள்' என்று சாடுகிறார்கள். இவ்வாறான நிலைமை மாறவேண்டும். நவீன உலகுக்கு பொருந்தும் வகையில் சட்டங்களை இயற்றுவோமென சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலை கல்வியில் இருந்து விலகும் மாணவர்களின் எதிர்காலம் திசைமாறி செல்கிறது. அவ்வாறானவர்களில் பெரும்பாலானோர் பாதாள குழு உறுப்பினர் கெஹல்பத்தரே பத்ம போன்று சமூகத்துக்கு எதிரானவர்களாக மாறி விடுகிறார்கள். பிள்ளைகளை உடலியல் ரீதியில் தண்டிப்பது முறையற்றது.

ஒருசில பாடசாலைகளில் ஆசிரியர்கள் பிள்ளைகளை 'முட்டாள்' என்று கடுமையாக விமர்சிக்கும் நிலை காணப்படுகிறது. உனக்கு கணிதம் பாடம் எப்போதும் வராது என்று மாணவர்களை திட்டும்போது அவர்கள் உளவியல் ரீதியில் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். பாடசாலை வகுப்பறையில் பின்வரிசையில் இருக்கும் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியானதாகவே அமையும்.

பிள்ளைகளை பிரம்பால் அடிப்பதைக் காட்டிலும் கடுமையான வார்த்தைகளால் பேசுவது கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தும். நாங்களும் கடுமையாக தண்டிக்கப்பட்டே படித்தோம் என்று ஒருசில குறிப்பிடுகிறார்கள். சமூக கட்டமைப்பு மாற்றமடைந்து விட்டது, ஆகவே நவீன உலகுக்கு பொருந்தும் வகையில் சட்டங்களை இயற்ற வேண்டும்.

பிள்ளைகள் கடற்கரைக்கு செல்வதாக குறிப்பிடப்படுகிறது சிறந்த புரிதல்களுடன் பிள்ளைகள் கடற்கரைக்கு செல்வதில் என்ன தவறு உள்ளது. கல்வி பொதுதரார உயர்தர பரீட்சைக்கு தோற்றும் சகல பிள்ளைகளுக்கும் 5000 ரூபாய் வழங்க வேண்டும் என்று கல்வி அமைச்சராக பிரதமரிடம் குறிப்பிட்டுள்ளேன். பிள்ளைகள் அவர்களின் இளமை காலத்தை சிறந்த முறையில் அனுபவிக்க வேண்டும். அவர்களுக்கான சுதந்திரத்தை சகல கட்டமைப்பிலும் வழங்க வேண்டும் என்றார்.

# ரூபா 1 கோடி பெறுமதியான 'குஷ்' கட்டுநாயக்காவில் இந்தியர் கைது

*கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதி மிக்க குஷ் போதைப்பொருளுடன் இந்தியர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேகநபர் வானூர்தி நிலைய பயணிகள் வெளியேறும் வாயிலினூடாக வெளியேற முற்பட்ட போது சுங்கப் பிரிவு அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தின் பயணிகள் வருகை முனையத்தில் வைத்து நேற்று புதன்கிழமை பயணப்பொதியில் போதைப்பொருளை மறைத்து நாட்டிற்கு கொண்டு வந்திருந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*பயணிகள் வருகை முனையத்தில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் சந்தேகத்திற்கிடமான பயணி ஒருவரை தடுத்து நிறுத்தி சோதனையிட்டுள்ளனர்.*

*பயணியின் பயணப்பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குஷ் போதைப்பொருள் அடங்கிய 3 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றிலிருந்து ஒரு கிலோ 556 கிராம் குஷ் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*இதேவேளை மீட்கப்பட்ட போதைப்பொருள் ஒரு கோடியே 55 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாமென சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் மதிப்பிடப்பட்டுள்ளது. சந்தேகநபர் வானூர்தி நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*36 வயதுடைய இந்தியர் ஒருவரே இதனைத் கைதாகியுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. சந்தேகநபர் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் வைத்து போதைப்பொருளை கொள்வனவு செய்துள்ளதுடன், பாங்கொக் நகரிலிருந்து இந்தியாவின் பெங்களூர் வானூர்தி நிலையத்தின் ஊடாக இண்டிகோ வானூர்தி சேவைக்கு சொந்தமான 6ஈ-1183 என்ற வானூர்தித்தின் மூலம் நேற்று அதிகாலை 12மணியளவில் நாட்டை வந்தடைந்துள்ளார்.*

*இதேவேளை கைதான சந்தேகநபர் மற்றும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொடர்பில் வானூர்தி நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.*

# 'தாரே ஜமீன் பார்' திரைப்படத்தை எம்.பிக்களுக்கு திரையிடவேண்டும்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் ஆசை இது

இந்தியாவின் 'தாரே ஜமீன் பார்' என்ற திரைப்படம் எனக்கும், எனது மனைவிக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பிள்ளைகளின் தேவைகள் பற்றி சிந்திக்க தூண்டியுள்ளது. இந்த படத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு திரையிட வேண்டும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிள்ளைகளை உடலியல் ரீதியில் தண்டித்தால் தான் அவர்கள் சிறந்த முறையில் வளர்வார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்க முடியாது. தற்போதைய பெற்றோர் பிள்ளைகளை உடலியல் ரீதியில் தண்டிப்பதில்லை.

.இந்தியாவின் 'தாரே ஜமீன் பார் ' என்ற படத்தை அண்மையில் பார்த்தேன். இந்த படத்தைப் பார்த்த பிறகு, அது என்னிடமும் என் மனைவியிடமும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. குழந்தைகளின் தேவைகளைப் பற்றி சிந்திக்க அந்த படம் எங்களைத் தூண்டியது.

பிள்ளைகள் பற்றி பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் படத்தைப் பார்க்க வேண்டும். இல்லையென்றால், அவர்களுக்கு அந்த படத்தை திரையிட்டு காண்பிக்க வேண்டும்.ஆகவே இந்த படத்தை பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# மாணவர்களைத் தண்டிப்பதற்கு எதிரான சட்டத்தால் பெரும் நெருக்கடி ஏற்படும்

**அஜித் பி. பெரேரா எம்.பி. சுட்டிக்காட்டு**

பாடசாலை மாணவர்கள் ஒழுக்கமற்ற வகையிலோ அல்லது முறையற்ற வகையிலோ செயற்படும்போது ஆசிரியர்கள், பெற்றோர்கள் அவர்களை தண்டித்தால் ஆளும்தரப்பால் கொண்டு வரப்பட்டுள்ள தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் பிரகாரம் அவர்கள் குற்றவாளிகளாக்கப்படுவார்கள். இச்சட்டத்தில் அவமதிப்பு என்பதற்கு பொருள் கோடல் வழங்கப்படவில்லை. இச்சட்டம் பெற்றோர், ஆசிரியர்களுக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும். பிள்ளைகளின் ஒழுக்கத்தை கவனத்திற்கொண்டு இவ்விடயம் குறித்து சகல தரப்பினருடனும் விரிவாகக் கலந்துரையாடுங்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தண்டனைச்சட்டக்கோவை (திருத்தச்) சட்ட மூலம் மீதான விவாதத்தில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2005 ஆம் ஆண்ட 25 ஆம் இலக்க உடலியல் ரீதியிலான தண்டனை நீக்கல் சட்டத்தின் ஊடாக 25 ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் உடலியல் ரீதியான தண்டனை வழங்குவது தடைச்செய்யப்பட்டுள்ளது.ஆகவே இதுவொன்றும் புதிய விடயமல்ல, புதிய சட்டத்திருத்தத்தின் ஊடாக உடலியல் ரீதியிலான தண்டனையை நீக்குவதாக குறிப்பிட்டுக்கொண்டு பாரதூரமான நிலைக்கு கொண்டு செல்லும் வழி உருவாக்கப்படுகிறது.

இந்த சட்டத்திருத்தம் தொடர்பில் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் விரிவான உரையாற்றினார். அவர் குறிப்பிட்ட விடயங்களுடன் நானும் உடன்படுகிறேன். இருப்பினும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த சட்டத்தில் கலாச்சாரம், ஒழுக்கம் மற்றும் உணர்வுகளுடன் தொடர்புடைய பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கும் இந்தச் சட்டத்தால் பாதிப்பு ஏற்படும்.

இந்த சட்டத்தில் 308 (4) ஆம் பிரிவின் ஆ பிரிவில் ‘குறைந்தபட்ச அளவில் அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில் உடலியல்; ரீதியில் தண்டனையளித்தால் அது சிறைத்தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படும்‘ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சட்டம் பற்றி குறிப்பிட்ட அமைச்சர் மாணவிகள் பாடசாலை சீருடையை கட்டையாக அணிந்து வருதல், விரல்களுக்கு நிறப்பூச்சி பூசுதல் பற்றி குறிப்பிட்டிருந்தார். பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவத் தலைவர்கள் இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்வது இந்த சட்டத்தில் குற்றமாக கருதப்படும். அவமதிப்பு என்பதற்கான வரைவிலக்கணம் இந்த சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை.

இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டால் பாடசாலையின் ஒழுக்க நெறி நடவடிக்கைகள் மற்றும் வீடுகளின் ஒழுக்க நடவடிக்கைகள் அச்சுறுத்தலுக்குள்ளாகும். உடலியல் ரீதியிலான தண்டனைகளுக்கு நாங்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை. இந்த சட்டத்தில் உடலியல் ரீதியிலான தண்டனையல்லாத விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதுவே பிரச்சினை. குறைந்த பட்ச அவமதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் இந்த சட்டத்தில் குற்றமாக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தில் குறைந்தபட்ச அவமதிப்பு என்பதற்கு எவ்விடத்திலும் விரிவான விளக்கமளிக்கப்படவில்லை. எவ்வாறு நீதிபதிகள் தீர்ப்பளிக்க முடியும். ஒருவருக்கு அவமானம் பிறிதொருவருக்கு அவமானமில்லாததாக இருக்க முடியும். காயம் என்பதற்கு தண்டனை சட்டக்கோவையில் பொருள்கோடல் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே அவமானம் என்பதற்கு பொருள்கோடல் வழங்கப்படவில்லை.

16 வயதுக்கு மேற்பட்ட ஆண் அல்லது பெண் பிள்ளை சுய விருப்பத்தின் அடிப்படையில் பாலியல் தொடர்பில் ஈடுபட்டு பெற்றோர் அல்லது ஆசிரியர்களிடம் அகப்படும் போது அவர்கள் ஒழுக்க நெறிமுறைகளுக்கு அமைய தண்டிக்கப்பட்டால் இந்த சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அதனை அவமானப்படுத்தலாக கருதி பெற்றோர் அல்லது ஆசிரியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம். என்பதே இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒழுக்கம் பற்றி பிள்ளைகளுக்கு பெற்றோர் கூட கடுமையாக அறிவுரை வழங்க முடியாத நிலை ஏற்படும். இதிலேயே பிரச்சினை காணப்படுகிறது.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர்
Kalaikkathir

# முறக்கொட்டாஞ்சேனை படை முகாம் 35 ஆண்டுகளின் பின் ஒக். 30 அகற்றம்

35 ஆண்டுகளின் பின் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முறக்கொட்டான்சேனை படைமுகாம் முற்றாக அகல்கிறது. எதிர்வரும் 30 ஆம் திகதி கட்டடக் கையளிப்பு இடம்பெறலாம். - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார். முறக்கொட்டான்சேனை படை முகாம் மூடுதல் தொடர்பாக அவரிடம் கேட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

படையினர்,1990 ஆம் ஆண்டில் இருந்து முறக்கொட்டான்சேனை பாடசாலையில் முகாமை அமைத்து இயங்கி வந்தனர். அந்த முகாம் பல தமிழர்களின் கண்ணீர்க் கதைகளுக்குக் காரணமாக இருந்தது.

2017 காலப்பகுதியில் மக்களின் கோரிக்கைகளை அப்போதைய மீள் குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் அவர்களுக்குக் கொண்டு சென்றேன். அதற்கமைய இராணுவ முகாமை அகற்றி பாடசாலையை விடுவிப்பதுடன், அங்குள்ள காணிகளில் மக்களுக்கான வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உத்தரவாதமளிக்கப்பட்டது.

கணிசமான காணிகளை மீட்டு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இராணுவக்கட்டுப்பாட்டில் இருந்த கணிசமாக காணிகள் மீட்கப்பட்டன. ஆனால், குறிப்பிட்ட எண்ணிகை இராணுவத்தினர் வரை பாடசாலையில் இருந்தனர். எனினும் தமக்குரிய காணிகளை வழங்குமாறு மக்கள் சார்பாக நாம் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கோரினோம். இருந்தாலும் அந்த இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலை கொண்டு இருந்தனர்.

இது பற்றி நாம் பல தடவைகள் உரிய அமைச்சர்கள், அரசுத் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்தோம். காலம் கடந்த நிலையில் இன்று (நேற்று) மீதி இராணுவத்தினர் முழுமையாக வெளியேறி உன்னிச்சை இராணுவ முகாமுக்குச் செல்கின்றனர் எனத் தகவல்கள் கூறுகின்றன. மக்களின் போராட்டம், எமது முயற்சிகள், அழுத்தங்கள் மூலமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் போதும் இவ் விடயம் கூறப்பட்டது.

இதே போல தாண்டியடி அதிரடிப் படைமுகாம், குருக்கள் மடம் இராணுவ முகாம், வவுணதீவுப் பொலிஸ் நிலை யம் போன்றவை துயிலும் இல்லம், பாடசாலை நிலம், பிரதேச சபை வளாகம் என்பவற்றில் இயங்கி வருகின்றன. அவையும் அகற்றப்பட வேண்டியவையாக உள்ளன. இவற்றில் இருந்தும் படையினர் வெளியேற வேண்டும் என்பதே எமது அழுத்தமான கோரிக்கையாகும். யுத்தம் முடிந்து 16 ஆண்டுகளாகியும் யுத்தமில்லாத மண்ணில் படையினரின் இருப்பு என்பது தமிழ்மண் மீதான ஆக்கிரமிப்பாகவே அமைகின்றது. காலம் கடந்தாவது படைமுகாம் விலக் கப்பட்டமை வரவேற்கத்தக்க விடய மாகும். அதற்காககவும், எதிர்காலத்தி லும் முகாம்களை விடுவிப்புச் செய்வ தற்காகவும் நன்றிகளைக் கூறுகின் றோம். ஆனால், அம்முகாமில் வதைக் கப்பட்ட, கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியையும் எதிர்பார்த்து நிற்கின்றோம். - என்றார்.

## மட்டு வைத்தியசாலை கட்டலின் கீழ் சிசுவின் சடலம் மீட்பு: தாயார் கைது

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் 35 வயதுடைய 2 பிள்ளைகளின் தாயான சுகாதார சிற்றூழியர் ஒருவர் சத்திர சிகிச்சை பிரிவின் மலசலகூடத்தில் குழந்தையைப் பிரசவித்து, சிசுவை கட்டிலின் கீழ் மறைத்து வைத்திருந்த நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது. செவ்வாய்க்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நிலையில் குழந்தை மீட்கப்பட்டமையை அடுத்து அந்தப் பெண் கைது செய்யப்பட்டார்.

இந்தச்சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற் படுத்தியுள்ளது. இது பற்றி தெரியவருவதாவது:- இந்த வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை பிரிவில் கடமையாற்றி வரும் சிற்றூழியரான பெண் திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளின் தாயாராவார். இவர் கடந்த திங்கட்கிழமை வழமை போல வைத்தியசாலையில் கடமையாற்றி வந்துள்ளார். இதன்போது அவருக்கு வயிறு வலிப்பதாக் கூறிகக அங்குள்ள மலசல கூடத்திற்கு சென்று ஒருவருக்கும் தெரியாமல் பெண் குழந்தை ஒன்றை பிரசவித்து, அதனைப் பெட்டி ஒன்றில் மூடிக் கட்டிலின் கீழ் மறைத்து வைத்துவிட்டு அங்கு கடமையாற்றி வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் அவருக்கு இரத்த போக்கு அதிகரித்ததையடுத்து, அவரை அவதானித்த தாதியர் ஒருவர் அவரை விடுதியில் அனுமதித்துள்ளார். அவரைச் சோதனை செய்த வைத்தியர்கள் அவர் குழந்தை பெற்றுள்ளமையைக் கண்டறிந்து கொண்டனர். பெற்றெடுத்த குழந்தையை அவர் பெட்டி ஒன்றில் போட்டு மூடிக் கட்டிலின் கீழ் மறைத்து வைத்திருந்த நிலையில் குழந்தை உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டது.

இந்தப் பெண் சிற்றூழியரின் கணவரும் அந்த வைத்தியசாலையில் சிற்றூழியராகக் கடமையாற்றி வருகிறார் எனவும், கணவருக்கும் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட மன கசப்பு காரணமாக கணவனை கடந்த ஜூன் மாதத்தில் இருந்து அவர் பிரிந்து வாழ்ந்து வருகிறார் எனவும், இந்த நிலையில் அந்தப் பெண் கர்ப்பம் தரித்து, முழுமையாக 38 வாரங்கள் கொண்ட, 2 கிலோவும் 485 கிராம் நிறை கொண்ட பெண் குழந்தையைப் பிரசவித்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

அவர் கர்ப்பிணியாக இருந்தமை அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் எவருக்கும் தெரியாது எனவும், இந்த நிலையில் அவர் குழந்தையை உயிருடன் பிரசவித்து பெட்டியில் போட்டு மறைத்து வைத்திருந்திருக்கின்றார் எனவும் கூறப்படுகின்றது. கணவனுக்குத் தான் அந்தக் குழந்தை பிறந்ததாகவும், கணவர் ஏற்கனவே இரண்டாவது பிள்ளை தனக்கு பிறக்கவில்லை என அடிக்கடி தெரிவித்து வந்த நிலையில் இந்தக் குழந்தை கர்ப்பம் ஏற்பட்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற அவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இதேவேளை குழந்தையின் மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்பு பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளதாகவும், உயிரிழந்த குழந்தை தனக்கு பிறக்கவில்லை என பிரிந்துள்ள கணவன் தெரிவித்ததையடுத்து குழந் தையின் மற்றும் தந்தையுடைய இரத்த மாதிரியை பெற்று மரபணுப் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வரு வதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்..

## 7 வயதுச் சிறுமியை துஸ்பிரயோகம் செய்த சித்தப்பாவுக்கு 7 வருடக் கடூழியச் சிறை

மட்டக்களப்பு மாவட்டத்தில் 7 வயது சிறுமி ஒருவரை 2007 ஆம் ஆண்டு பாலியல் துஷ்பிரயோகம் செய்த சித்தப்பாவுக்கு முதலாவது குற்றத்துக்கு 2 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும், இரண்டா வது குற்றத்திற்கு 7 வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 லட்சம் ரூபா இழப்பீடும் வழங்க நீதிமன்றம் தீர்ப்பழித்துள்ளது.

சான்றுபொருள்கள் மற்றும் சட்டவைத்தியர் அறிக்கை மூலம் குற்றம் நீரூபிக்கப்பட்டு எதிரி குற்றவாளியாக செப்டெம்பர் 11 வியாழக்கிழமை இனம்காணப்பட்டார். பின்னர், வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரபாகரன் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை எடுத்து கொள்ளப் பட்டபோது இந்தத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## கடும் அமளி துமளியால் பருதித்துறை நகர சபை நேற்று ஒரு மணி நேரம் ஒத்திவைப்பு

பருதித்துறை நகர சபையில் நேற்று கடும் அமளிதுமளிஏற்பட்டதால்சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

பருத்தித்துறை நகரசபையின் ஐந்தாவது அமர்வு நேற்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நகரபிதா வின்சன் டி போல் டக்ளஸ் போல் தலைமையில் ஆரம்பமாகிடம்பெற்றது. இதில் நகரசபை செயலாளர் ததாரணி மற்றும் சபை உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். இதன்போது நீதிமன்ற வீதியில் உள்ள வெள்ள வாய்க்காலினை மூடுவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை விடுவித்து செயற்படுத்த ஒப்புதல் கோரியிருந்த நிலையில் பருத்தித்துறை புதிய மரக்கறி சந்தையில் தேங்கும் மழை வெள்ளத்தை வெளியேற்ற வாய்க்கல் அமைக்க வேண்டும் என்ற விடயத்தை முன்வைத்து தமிழ் அரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் உறுப்பினர்கள் எதிர்க் கருத்துகளை கூறி கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனால் சபையை தலைவர் ஒத்தி வைத்தார்.

அமளியில் ஈடுபட்ட உறுப்பினர்களை அழைத்து விடயம் தொடர்பில் தனியாக் கலந்துரையாடினார். குழு நிலைக் கலந்துரையாடலுக்கு வருமாறு நகர சபை கணக்காளர் தலைவரால் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் கணக்காளருக்கு நகர சபைச் செயலாளர் அனுமதியளிக்கவில்லை. அதனால் அவர் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இதனால் அரை மணி நேரம் இழுபறி ஏற்பட்ட பின்னர் கணக்காளர் வந்து விடயத்தை நகர சபை உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தினார். இதையடுத்து மீண்டும் பகல் 11.15 மணியளவில், ஒரு மணி நேரம் கழித்து சபை நடவடிக்கைகள் மீளவும் தொடங்கப்பட்டன.

பருத்தித்துறை புதிய மரக்கறிச் சந்தை கட்டடம் அமைக்கப்பட்டபோது மழை வெள்ள நீர் வெளியேறும் வாய்க்கால் பொருத்தமற்ற முறையில் அமைக்கப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டு அதற்கு பொறுப்பான நகரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மீது விசேட குழு ஒன்றினை அமைத்து விசாரணை மேற்கொள்வது என ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சபை அமைவதற்கு முன்னதாக நகரசபையினால் முன்னெடுக்கப்பட்ட, புதிய மரக்கறி சந்தையில் மின்விசிறிகள் பொருத்தப்பட்டது உள்ளிட்ட சில விடயங்களின்போது இடம்பெற்ற ஊழல் முறைகேடுகள் தொடர்பில் நகரபிதாவினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்போது செயலாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் எவரும் அதனை ஆட்சேபிக்காதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள், இளைஞர்களிடையே சீரழிவினை ஏற்படுத்தும் வகையில் பருத்தித்துறை துறைமுக பகுதியில் உள்ள இராணுவ சிற்றுண்டிச்சாலையில் சிகரட் விற்பனை கட்டுப்பாடின்றி இடம்பெற்று வருகின்றதுடன், பொதுச் சுகாதார பரிசோதகரது கண்காணிப்பு இன்றி இயங்கிவருவது தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றினை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

# அலைமகள் துதி



**அருளான இலக்குமியே அடிபணிந்தேன் அம்மா !**

**சங்கநிதி பதுமநிதி தந்திடு தாயே**
**சஞ்சல மணுகாமல் காத்திடுவாய் நீயே**
**பஞ்சமெனும் இருள்சூழா பார்த்திடுவாய் தாயே**
**பாதமலர் சரணடைந்தோம் பராபரமே உன்னை**

**உணவோடு உடையுறைள் உவந்தளிப்பாய் தாயே**
**உலகோர்கள் இகழாமால் வாழ்வளிப்பாய் தாயே**
**அளவோடு செல்வமதை அளித்திடுவாய் தாயே**
**ஆசையது பெருகாமல் பார்த்துவிடு அம்மா**

**பொருளில்லார்க் கிவ்வுலகு இல்லையாம் அம்மா**
**பொருளீய்ந்து எந்தனைக் காத்திடுவாய் அம்மா**
**பொருளோடு ஈகையையும் மனமமரச் செய்வாய்**
**அருளான இலக்குமியே அடிபணிந்தேன் அம்மா**

**இருப்பாரும் இல்லாரும் தேடுகிறார் தாயே**
**எவரெவர்க்கு எதுவேண்டும் என்பதை நீயறிவாய்**
**கொடுக்கின்ற தருணமதில் கொடுத்துமே உயர்வாய்**
**கோணாத குணமதனை தந்திடுவாய் அம்மா**

**பொருளும் அருளும் ஒன்றாய் இணைய**
**கருணை புரிவாய் இலக்குமித் தாயே**
**தருமம் உலகில் தளைக்க அருள்வாய்**
**தனமாய் ஒளிரும் இலக்குமித் தாயே**



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்- ஆஸ்திரேலியா

# சிகிச்சையின்போது இறந்த சிறுவனுக்கு நீதி பெற்றுத்தர நடவடிக்கை இல்லை

## சட்டமா அதிபர் மீது ஆளும்தரப்பு எம்.பியே குற்றச்சாட்டு

கொழும்பு சிறுவர் வைத்தியசாலையில் சிறுநீரக சத்திர சிகிச்சையின்போது இறந்த சிறுவன் ஹம்திக்கு சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட ஆளும்தரப்புக்கு முடியாமல் போயிருக்கிறது.சட்டமாஅதிபர்திணைக்களமும்இதுதொடர்பான நடவடிக்கையை இழுத்தடித்துக்கொண்டிருக்கிறதென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற தண்டனை சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:,

இரண்டரை வயது சிறுவன் ஹம்தி பஸ்லின் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு, 2022இல் கொழும்பு சிறுவர் சீமாட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சிறுவனை பரிசோதித்த வைத்தியர்கள், சிறுவனின் இடது பக்க சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, அதற்காக சிறுவனுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சத்திரசிகிச்சையின் பின்னர், சிறுவன் ஹம்தி 2023 ஜுலை 27 உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளின்போது, சிறுவனின் இரண்டு சிறுநீரகங்களும் நீக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

என்றாலும் சத்திரசிகிச்சை மேற்கொண்ட வைத்தியர் மற்றும் அவரது உதவியாளர் தற்போது நாட்டை விட்டு வெளியேறிஇருக்கின்றனர். சிறுவன்இறந்துஒருமாதத்துக்குள் இவர்கள் நாட்டில் இருந்து வெளியேறிச் சென்றுள்ளனர்.

என்றாலும் சத்திரசிகிச்சை தொடர்பில் சிறுவனின் பெற்றோர்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தில், பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த மார்ச் மாதம் சட்ட வைத்தியரால் இறப்பு பரிசோதனை இடம்பெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இறப்பு விசாரணை அறிக்கையில், குற்றம் அல்லது கவனயீனம் இடம்பெற்றிருந்தால் சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக கைது செய்து சட்டத்தை நிலைநாட்டுமாறு தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைமேற்கொண்டு, சட்டமாஅதிபர்திணைக்களத்துக்கு அறிக்கை சமர்ப்பித்து, 6 மாதங்கள் கடந்துள்ளன. ஆனால் இதுதொடர்பான குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கவோ, வழக்கு தொடுப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளோ சட்டமா அதிபர் திணைக்களம் இதுவரை செய்யவில்லை.

இது தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சர்களாக இருந்த கெஹலிய ரம்புக்வெல, ரமேஷ் பத்திரண ஆகியோரிடனம் நான் கேட்டிருந்தேன். அதேபோன்று இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தபோது, தற்போதுள்ள சுகாதார அமைச்சரிடமும் இந்த சிறுவன் தொடர்பான சுகாதார அமைச்சின் விசாரணை அறிக்கையை கேட்டிருந்தேன். ஆனால் இதுவரை வழங்கவில்லை. அவ்வாறான விசாரணை அறிக்கை ஒன்று சுகாதார அமைச்சில் இல்லை.

ஆளும்தரப்பு சட்டத்தின் ஆட்சி தொடர்பில் கதைக்கிறது. நாட்டின் அனைவரும் சட்டத்தின் ஆட்சிக்கு கீழ்பட்டவர்கள் என அரசுத் தலைவர் தெரிவிக்கிறார்.அப்படியானால் சிறுவன் ஹம்திக்கு சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட இந்த ஆளும்தரப்புக்கும் முடியாமல் போயிருக்கிறது. அதுதொடர்பில் கவலையடைகிறேன் என்றார்.

# ஒக்டோபர் பயண நாடுகளில் இலங்கைக்கே முதலிடம்

உலகளாவிய பயண சஞ்சிகையான 'டைம் அவுட்' இவ்வாண்டு ஒக்டோபரில் பயணிக்க வேண்டிய நாடுகள் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதற்கமைய குறித்த பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பிடித்துள்ளது.

ஒக்டோபர் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை ஒரு சிறந்த இடமாக இருப்பதால், அதன் இதமான வெப்பமண்டல காலநிலை, கலாச்சார பாரம்பரியம் மற்றும் இயற்கையான அழகு ஆகியவற்றை குறிப்பிட்டு இந்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. கடற்கரைகள் மற்றும் மலைநாட்டுப் பயணங்கள் முதல் புராதன இடிபாடுகள் மற்றும் வனவிலங்கு சவாரிகள் வரை, இலங்கை பார்வையாளர்களுக்கு அனைத்தையும் வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் இலங்கைக்கு அடுத்தபடியாக, இலையுதிர் கால நிறங்கள் மற்றும் பருவகால திருவிழாக்களுக்காக துருக்கி மற்றும் மெக்சிகோ இடம்பெற்றுள்ளன. ஸ்பெயினில் உள்ள வலென்சியா, நியூயார்க் நகரம், பிலிப்பைன்ஸ், பூட்டான், பொஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா, ருமேனியாவில் உள்ள டிமிசோரா, சான் பிரான்சிஸ்கோ மற்றும் நமீபியா ஆகியவை இடம்பெற்றிருந்த மற்ற இடங்களாகும்.

வெளியிடப்பட்டுள்ள பட்டியலுக்கமைய இந்த இடங்கள் அவற்றின் பருவகால கவர்ச்சி, கலாச்சார நிகழ்வுகள் மற்றும் ஒக்டோபரில் சிறப்பாக அனுபவிக்கக்கூடிய தனித்துவமான பயண அனுபவங்கள் ஆகியவற்றிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஞாயிறன்று சகல கடைகளுக்கும் பூட்டு பருத்தித்துறை வர்த்தக சங்கம் தீர்மானம்

பருத்தித்துறை நகர் பகுதியில் இயங்கி வரும் சகல வர்த்தக நிலையங்களும் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடப்படுவதற்கு பருத்தித்துறை வர்த்தக சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அத்தியாவசிய அவசர தேவைகளுடன் தொடர்புடைய உணவகங்கள், மருந்தகங்கள், சைக்கிள் திருத்தகங்கள் தவிர்ந்த ஏனைய சகல வர்த்தக நிலையங்களையும் ஞாயிற்றுக்கிழமை தோறும் மூடுவதற்கு பருத்தித்துறை வர்த்தக சங்கம் அண்மை நாள்களில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

துறைசார்ந்த வர்த்தகர்களுடன் தனித்தனியான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு எல்லோருடைய ஆதரவையும் வர்த்தக சங்கத்தினர் கோரி இருந்தனர். நேற்று மாலை 4.30 மணியளவிலும் பல சரக்கு வர்த்த நிலையத்தினருடன் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில், பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமைகளில் சகல வர்த்தக நிலையங்களையும் மூடுவது என்றும் பண்டிகைத் தினங்களையொட்டிவரும் ஞாயிறு தினங்களில் மட்டும் கடைகளைத் திறக்க அனுமதிப்பது என்றும் நேற்றைய கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டது.

# மகிந்தவை தங்காலையில் சந்தித்தார் இந்தியத் தூதர்

இலங்கைக்கான இந்திய உயராணைணர் சந்தோஷ் ஜா, அரசுத் தலைவர் மகிந்தவை சந்தித்துள்ளார். தங்காலையிலுள்ள கால்டன் இல்லத்தில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன் போது உயராணையர் சந்தோஷ் ஜா மற்றும் முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு இடையில் இருதரப்பு ஒத்துழைப்பின்பல்வேறுஅம்சங்கள் மற்றும் இலங்கையில் அரசியல் முன்னேற்றங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாக கொழும்பிலுள்ள இந்திய உயராணையரகம்தெரிவித்துள்ளது.

கொழும்பு - விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறிய முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த, தங்காலை கால்டன் இல்லத்தில் தற்போது வசித்து வருகின்றார். அவர் கொழும்பிலிருந்து வெளியேற முன்னர் சீன தூதுவரை அவரை சந்தித்திருந்தார். இதனைத் முக்கிய இராஜதந்திரிகள் முன்னாள் அரசுத் தலைவர்களை சந்தித்து வரும் நிலையில், இந்திய உயர்ஸ்தானிகரும் மஹிந்தவை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பரந்தனில் மீண்டும் வருகிறது இரசாயனத் தொழிற்சாலை

## அமைச்சரவை அனுமதி

பரந்தனில் அமைந்திருந்த இரசாயனத் தொழிற்லையை மீண்டும் தொடங்க அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது. இதற்காக முதலீட்டாளர்களிடம் விண்ணப்பம் கோரப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் பரந்தனில் இயங்கி, போரின காரணமாக அழிவடைந்த இரசாயனத் தொழிற்சாலையை மீண்டும் தொடங்குவதற்கான விண்ணப்பங்களைக்கோருவதற்குஅமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. செப்டெம்பர் 22 இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை இயக்கி, இங்கே குளோரின் மற்றும் காஸ்டிக் சோடாவை உற்பத்தி செய்யத் திட்டமிடப்படுகின்றது. இதன் மூலம் குளோரின் இறக்குமதிக்காக செலவு செய்யப்படும் அந்நிய செலாவணியை மீதப்படுத்துவதோடு 95 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பினை வழங்க முடியும்.

## கிரிப்டோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலகுகளை பெற்றுக்கொண்டார்கள் என்பது குறித்து சபைக்கு அறிவிக்க வேண்டும். இவ்விடயம் குறித்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளூராட்சி மன்றங்களின் கட்டுபாட்டிலுள்ள வீதிகளை திருத்துவதற்கான நிதி ஒதுக்கீடு அந்த உள்ளூராட்சிமன்றங்களுக்குஒதுக்கப்படாமல் மாவட்டச்செயலர்கள்ஊடாகஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த ஒதுக்கப்பட்ட நிதிக்கான வீதிகளின் தெரிவு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரியாமல் இதில் உள்ள மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளாமல் திருத்தப்படுவதற்கான வீதிகளின் பெயர் பட்டியல் வேறு எங்கேயோ தயாரிக்கப்பட்டு அந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அந்த உள்ளூராட்சி மன்றங்களின் பட்டியலில் இருக்கின்ற பெயர்களை ஆராய்ந்து பார்க்கின்றபோது சில உள்ளூராட்சி மன்றங்களில் உதாரணத்திற்கு செட்டிகுளம் பிரதேச சபையை பொறுத்தவரையில் ஒரு வட்டாரத்திற்கு 18 வீதிகள் ஒதுக்கப்பட்டு வேறு சில மிகவும் மோசமான வட்டாரங்களுக்கு எந்த ஒதுக்கீடுகளும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

எனவேவீதிதிருத்தங்களுக்குஉள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த நிதி யாரோ சிலரால் தீர்மானிக்கப்பட்டு மாவட்டச் செயலர்களுக்குஅனுப்பப்பட்டுஅவர்கள் ஊடாக நிதி வழங்கப்பட்டு தான் வீதி திருத்தங்கள் நடைபெறும் நிலையில் உள்ளூராட்சி மன்றங்கள்ஒருஒப்பந்தகாரர்களைப்போன்றே உள்ளன. இது ஒரு பாரதூரமான விடயம். இந்த நிதி ஒதுக்கீட்டுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் இதில் கூடிய கவனம் எடுத்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்.

உள்ளூராட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகள் தற்போது ஒவ்வொரு வட்டாரங்களாக சென்று மக்களோடு கலந்துரையாடி அந்த மக்களின் தேவைகளை அறிந்து அந்தப் பிரதிநிதிகள் ஒரு பட்டியலை வைத்துள்ளார்கள். இவ்வாறான நிலையில்அந்தஉள்ளூராட்சிமன்றங்களுடன் தொடர்பில்லாதவர்கள் இந்த வீதிகளைத் தெரிவு செய்வதன் மூலம் நிதி ஒதுக்கீடு அதிக தேவையுள்ள மக்களுக்குப் போய்ச் சேர்வதனைத் தடுக்கின்ற செயற்பாட்டைச் செய்ய வேண்டாமென சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் வலியுறுத்துகின்றேன்.

வவுனியா நகர சபை மாநகரசபையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. அதாவது நகரசபை என்ற பெயர்ப்பலகை மாநகரசபையாக தரமுயர்ந்துள்ளது .ஒரு மாநகரசபைக்கான அடிப்படை வசதிகள், ஆளணிகள் அங்கில்லை.எனவே அரசு 2026 ஆம் ஆண்டிலாவதுஆளணியைநிரப்பநடவடிக்கை எடுக்க வேண்டும். அதேவேளை முழு வவுனியா மாவட்டத்திற்கு ஒரு தீயணைப்பு வாகனம், ஒரு அம்பியூலன்ஸ் மட்டுமே உள்ளன . தனியான ஒரு பிரிவு இல்லை. இதற்கு முக்கிய காரணம் ஆளணி, நிதி இல்லாமையே ஆகும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir













காலைக்கதிர் Kalaikkathir

# காற்றாலை திட்டத்தை எதிர்த்து மன்னாரில் போராட்டம் தொடரும்

## மாவட்டம் முழுவதும் ஆர்ப்பாட்டங்களை விரிவுபடுத்த முடிவு

மன்னாரில் காற்றாலைத் திட்டங்களைத் தொடரும்படி அரசுத் தலைவர் அநுரகுமார உத்தரவிட்டுள்ளார். யதார்த்தத்தைக் கருத்தில் கொண்டு திட்ட்த்தை தொடரும்படி மாவட்டச் செயலருக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். இது அவரது தன்னிச்சையான முடிவு என்று விமர்சித்துள்ள காற்றாலைத் திட்டத்திற்கு எதிரான போராட்டக்கார்கள் தமது மண்ணையும் வளங்களையும், உரிமையையும், பாதுகாக்க போராட்டங்களைத் தொடர்வது என்று முடிவு செய்துள்ளனர். சில தினங்களில் மாவட்டம் தழுவிய ரீதியில் பெரும் போராட்டம் வெடிக்கும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தெரிவத்தார்.

மன்னார்போராட்டக்களத்தில்நேற்றுப்மதியம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவருகின்ற போராட்டம் இன்று (நேற்று) 53 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செய லகத்தில் இருந்து மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது தொடர்பான செய்த அனுப்பப்பட்டுள்ளது. மன்னாரில் மேற்படி 14 காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கும் பணிகளை நிறுத்தத் தேவையில்லை,அதற்கானபணிகளைதொடர்ந்து முன்னெடுக்குமாறும், அதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மற்றும் முன்னர் ஏற்பட்ட பாதிப்புக்களையும் நிவர்த்தி செய்யவேண்டும் என்ற கட்டளையையும் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு அரசுத் தலைவர் வழங்கியுள்ளார்.

எதை வைத்து இந்த அனுமதியை ஜனாதிபதி வழங்கியுள்ளார் என்று எமக்குத் தெரியவில்லை. பல முறை இந்தத் திட்டம் குறித்து அதிகாரிகளுடனும், அமைச்சர்களுடனும், அரசுத் தலைவருடனும் தொடர்பு கொண்டு மக்களுடைய கருத்துக்களையும், எங்களுடைய கருத்துக்களையும் முன்வைத்தோம். எனினும் மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்காமல், தான்தோன்றித்தனமாக தனது சுய முடிவை எடுத்துள்ளமை நம்பியிருந்த எமக்கு மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

வாழ்வது எமது உரிமை. அதை யாரும் பறிக்க முடியாது. அந்த உரிமைக்காக நாங்கள் தொடர்ந்தும் போராடுவோம். எமது போராட்டம் விரிவடைகிறது என்பதை உங்களுக்கு கூறிக் கொள்ள விரும்புகின்றோம். எமது மூன்று கோரிக்கைகள் நிறைவேறும் வரை எமது போராட்டம் தொடரும். மாவட்ட ரீதியில் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்துப் பெரும் போராட்டமாக மாறவுள்ளது. சட்டத்தை மீறுகின்ற போராட்டமாக - ஏனையவர்களுக்கு இடையூறை ஏற்படுத்துகின்ற போராட்டமாக - இப்போராட்டம் ஒருபோதும் அமையாது.

காற்றாலைத் திட்டத்தை தடுத்து நிறித்தும் எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளையும்நாங்கள்முன்னெடுத்துவருகின்றபோதும்,எமது கோரிக் கைகளை முன்வைத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படும். எமது மன்னார் மாவட்டச் செயலகம், மாவட்டச் செயலர் மற்றும் அவருடன் கடமையாற்றுகின்ற அதிகாரிகளுடைய செயல்பாடுகள் எமக்கு மிகவும் கவலையை ஏற்படுத்துகின்றன. இந்தக் கடிதம் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனி னும் நேற்று மாலை ஒருவரை அனுப்பி இக்கடிதத்தை பெற்றுக் கொண்டுள்ளோம். மிகவும் வேதனையான விடயமாக அமைந்துள்ளது.

கடந்த 40 நாள்களாக இடம்பெற்ற வேலைத்திட்டங்களை மாவட்டச்செயலகம் கண்காணிக்கவில்லை என்பதை இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாவட்டச்செயலகமும்,அதிகாரிகளும் இத்திட்டங்களுடன்ஒத்துப்போகின்றார்களா?என்கின்றசந்தேகம்எழுந் துள்ளது. மக்களை அழிக்கும். மக்களின் வாழ்விடங்கள் பறிக்கின்ற, இத்தீவை இல்லாது செய்கின்ற செயல்பாடுகளுடன் அதிகாரிகள் அனைவரும் இணைந்து போகின்றார்களா என்கிற சந்தேகமும் எழுந்துள்ளது. அவர்களின் செயல்பாடு மிகவும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. மக்களாகிய நாங்கள் ஒன்றிணைந்து எமது மண்ணையும், வளங்களையும், உரிமையையும் பாதுகாக்க எமது போராட்டம் தொடரும். இனி வரும் நாள்களில் இப்போராட்டம் பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படும்.

எதிர்வரும் திங்கட்கிழமை மன்னாரில் மாவட்ட தழுவிய ரீதியில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம். அனைத்து தரப்பினரும் கலந்துகொண்டு எமது சக்தியை இந்த அரசுக்கு காண்பிக்க வேண்டும். அரசுத் தலைவர் தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்துள்ளார் என்பதே மிகவும் கவலைக்குரிய விடயம். மக்களை பாதிக்காத வகையில் நடவ டிக்கைகளை எடுப்போம் என அனைத்து அதிகாரிகளும் தெரிவித்திருந்தனர். ஆனால் அரசுத் தலைவருடைய அறிவித்தல் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. அது அரசுத் தலைவரின் முடிவாக இருக்கின்ற நிலையில், எங்களுடைய முடிவு எங்களுடைய உரிமைகளை பெற்றுக் கொள்ளுவோம் என்ற ஒரு முடிவுதான். எனவே இந்த போராட்டக் களத்தில் இருந்து சட்டங்களை மீறாது எமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம்.

சட்ட ரீதியாக மூன்று நடவடிக்கை களை முன்னெடுத்து வருகின்றோம். கனிய மணல் அகழ்விற்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கையை முன்னெடுத்து வருகிறோம். 14 காற்றாலை திட்டங்க ளுக்கு எதிரான இரு வழக்குகளை தாக்கல் செய்வதற்கான அனைத்து நடவடிக் கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. - என அவர் மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்க அதிபர் ட்ரம்பை சந்தித்து அநுரகுமார பேச்சு

அமெரிக்கா சென்றுள்ள அரசுத் தலைவர் அநுரகுமார அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பை நியூயோர்க்கில் நேரில் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அமர்வின் பக்க நிகழ்வாக இடம்பெற்றுள்ளது. இதேவேளை, அங்கு உலக நாடுகளின் தலைவர்கள் பலரையும் அரசுத் தலைவர் அநுரகுமார சந்தித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ள அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்கும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான விசேட பிரதிநிதி, இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவராக பெயரிடப்பட்டுள்ள பிரதிநிதி மற்றும் வெள்ளை மாளிகை ஜனாதிபதி பணிக்குழாம் பணிப்பாளர் சேர்ஜியோ கோருக்கும் இடையிலான சந்திப்பு அமெரிக்க நேரப்படி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் வர்த்தக, வாணிப, சுற்றுலா மற்றும் முதலீடு உள்ளிட்ட இரு நாடுகளுக்கும் முக்கியமான துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதோடு அந்தத் துறைகளை மேலும் முன்னேற்றுவது குறித்தும் ஆராயப்பட்டது.

முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு பலமான மக்கள் ஆணையுடனான புதிய அரசு என்ற வகையில், பொருளாதார வளர்ச்சியை மையமாகக் கொண்ட ஒரு வளமான பொருளாதார முன்னுரிமை அடிப் படையில் அமெரிக்காவுடன் ஒரு செயற்பாட்டுடனான மற்றும் மிக நெருக்கமான உறவைப் பேண எதிர்பார்ப்பதாக அநுரகுமார தெரிவித்தார்.

வெளிப்படைத் தன்மையை உறுதி செய்தல் உட்பட மக்களின் எதிர்காலத்துக்காக பொருளாதாரத்தின் நீண்ட கால ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்குத் தேவையான மறுசீரமைப்பு உள்ளிட்ட அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் அரசுத் தலைவர் எடுத்துரைத்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக சமமின்மையை நிவர்த்தி செய்தல், இரு தரப்பு வர்த்தகத்துக்கான தடைகளைக் குறைத்தல், நியாயமான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் வர்த்தக உறவுகளை உறுதி செய்வதற்காக ஒரு உடன் பாட்டை எட்டுதல் மற்றும் இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்க அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுகளின் முன்னேற்றம் தொடர்பில் இதன்போது இரு தரப்பினரும் மீளாய்வு செய்தனர்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி முன்னாள் பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மூத்த அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர

## தமிழ், சிங்கள மீனவர்கள் ஒன்றிணைந்து திருகோணமலையில் நேற்று பேராட்டம்

திருகோணமலை, உள்துறைமுகக் கடலில் கட்டுவலை மீன்பிடியில் திருடர்களை சட்டரீதியாக தண்டிக்குமாறு கோரியும் நேற்று தமிழ் மற்றும் சிங்கள மீனவர் சங்கங்கள் இணைந்து உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டன.

போராட்டத்தின் இறுதியில் மீனவர் சங்க பிரதிநிதிகள் திருகோணமலை மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளரிடம் கையளித்தனர். இப்போராட்டம் குறித்துக் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய ஆலோசகருமான பாக்கியராசா தெரிவித்ததாவது:

உள்துறைமுக கடற்பரப்பில் எம்மால் மேற்கொள்ளப்படும் கட்டுவலைத் தொழிலுக்கு, இப்பகுதியைச் சேர்ந்த ஒரு சிலரால் பாதிப்புகள் ஏற்படுகின்றன. எமது மீனவர் சங்க அங்கத்தவர்களால் 56 இடங்களில் கட்டுவலை அமைக்கப்பட்டு மீன்பிடி நடைபெறுகின்றது. மேற்படி கட்டுவலைகளில் உள்ள கூடுகளில் நிற்கும் கணவாய் மீன்களைச் சிலர் திருடுகின்றனர். கணவாய்களைப் பிடிப்பதற்கென அவர்கள் பயன்படுத்தும் விசேட தூண்டிலினால் எமது கட்டுவலைகள் சேதமடைகின்றன. வலைகள் சேதமடையும்போது கூட்டில் உள்ள ஏனைய மீன்களும் வெளியேறி விடுகின்றன. இதனால் வருமானம் முழுவதும் இழக்கப்படுகின்றது.

எனவே இவ்வாறு திருட்டில் திருடர்களுக்கு உரிய தண்டனை வழங்கி திருட்டுக்கள் தொடராது இருப்பதை உறுதிப்படுத்துமாறும் நாங்கள் உரிய அதிகாரிகளை வேண்டுகின்றோம்.

இந்த உள்துறைமுகக் கடற்பரப்பில் 1935 ஆம் ஆண்டு முதல் நான்கு தலைமுறையாக இந்தக் கட்டுவலைத் தொழில் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தொடக்கத்தில் பிளான்ரன் பொயின்ட் முகாமை அண்மித்த கடற்ப்பரப்பில் இருந்து கடற்படை முகாம் வரையிலான கடல் பகுதியில் 64 இடங்களில் கட்டு வலை அமைக்கப்பட்டு மீன்பிடி நடை பெற்று வந்தது. உள்நாட்டுப் போர் நடைபெற்ற காலத்தில் பாதுகாப்பு காரணங்களின் நிமித்தம், கட்டுவலைகளின் எண்ணிக்கை 56 ஆகக் குறைவடைந்தது.

கடற்படை முகாமை அண்மித்த கட்டுவலைகள் அகற்றப்பபட்டன. 1935ம் ஆண்டு முதல் இக்கட்டு வலைத் தொழில் இப்பகுதியில் செய்யப்பட்டு வந்தபோதும், 1993 ஆம் ஆண்டில் முதல் முறையாக இத்தொழிலுக்கென அனுமதிப்பத்திரம் கடற்றொழில் அமைச்சால் வழங்கப்பபட்டது. அது வருடாந்தம் புதிப்பிக்கப்படட்டு வருகின்றது. ஆழம் குறைந்த கடற்ப்பரப்பில் மட்டுமே இக்கட்டுவலைத் தொழில் செய்ய முடியும்.

2019ஆம் ஆண்டின் பின்னர் சிலர் எமது கட்டு வலைகளில் கணவாய்களைத் திருட தொடங்கினர். இதனால் முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கின. உள்துறைமுகப் பகுதியில் தூண்டில் மீன்பிடி. வலைபயன்படுத்தி மீன்பிடித்தல், கரைவலை மீன்பிடி என்ற மேலும் மூன்று வேறு மீன்பிடித் தொழில்களும் நடைபெற்று வருகின்றன.

கட்டுவலைத் தொழில் மேற்படி மூன்று தொழில் முறைகளுக்கு இடையூறு ஏதும் ஏற்படுத்தாது நடைபெற்று வருகின்றது. அதேவேளை மேற்படி மூன்று மீன் பிடியாளர்களால் கட்டுவலைத் தொழிலுக்கு இதுவரை எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. இந்நிலையில் எமது கட்டுவலைகளில் மீன்களை(கணவாய்) திருடும் சிலரை பலமுறை கையும் களவுமாக பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளோம். ஆனால் அடுத்த நாளே அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு வெளியில் வந்து மீண்டும் திருட்டில் ஈடுபடுகிறார்கள்.

எமது பாதிப்புக்களுக்கான தீர்வுகளையும் முன்வைத்து நடக்கும் இப்போராட்டம் மூலம் வெற்றி கிடைக்காவிட்டால் அடுத்து நீதித்துறையிடம் நேரடியாக முறையிட எண







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.09.2025இல் வெளியிடப்பெற்றது